1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
phone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 32-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

பலதினங்களாக எறித்துவந்த கடூர வெயிலைத் தாங்கவாற்றாது மக்கள் பெருங்கஷ்டம் அனுபவித்தார்கள். இரண்டொரு தினங்களாக மப்பும்மந்தாரமுமாயிருந்துவந்து இன்று அதிகாலை ஒருபாட்டம் நல்லமழை பெய்திருக்கின்றது.

### குருமார் ஞானஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனத்தைச் சேர்ந்த குருப்பிரசாதிகளின் வருடாந்த முதலாவது பிரிவான ஞானஒடுக்கம் செற்றுப்புதன்கிழமைமாலை ஆரம்பமாயிற்று. வண. எல் ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் ஞானஒடுக்கபோதகம் செய்கின்றார். 45 குருமார்வரை அதற்குச் சமுகமளித் திருக்கின்றார்கள்.

### சிறுவர்குழுவின் ஆர்ப்பாட்டம்

சமீபத்தில் நடைபெற்ற பாணந்துறை பட்டினசபைத் தேர்தலில் இடதுசாரிகள் பலவாக்குறுதிகளைச் செய்திருந்தார்கள். அப்பட்டினசபையின முதற்கூட்டம் சென்ற 9-ந்திகதி நடைபெற்றபோது, தேர்தல்காலத்தில் இந்தஇடதுசாரிஅங்கத்தவர்கள் செய்திருந்த வாக்குறுதிகள பொறிக்கப்பட்ட அட்டைகளைக் கையில்ஏந்திய வண்ணம் பலவர்ணச்சட்டைகள் அணிந்த சுமார் 500 பாடசாலைச்சிறுவர்கள் பட்டினசபைமண்டப வாயிலையடைந்து அவர்கள்அளித்த அந்தவாக்குறுதிகளை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரும்படி கேட்டு ஆர்ப்பாட்டஞ்செய்தார்கள். மதியப்போசனம், புத்தகங்கள்முதலியன இலவசமாகஅளிப்பதாய் அங்கத்தவர்கள் அளித்தவாக்குறுதியை நிறைவேற்றிவைக்கும்படியாகப் பட்டினசபைத் தலைவரை அவர்கள் கிட்டிகட்டிநின்றார்கள். அதுபற்றி ஆலோசனைசெய்து விரைவிலேபதிலளிப்பதாகப் பட்டினசபைத்தலைவர் தெரிவித்துக்கொண்டார். அவர்கள் ஏந்திச்சென்ற அட்டைகளில் இலவசபாண், இலவசமத்தியானப்போசனம், இலவசபுத்தகங்கள் எனப் பொறிக்கப்பட்டிருந்தன.

### புதிய டிஸ்திறிக்நீதிபதி

இதுவரைகொழும்புப் பிரதம மஜிஸ்றேற்றாகக் கடமைபார்த்துவந்தவரும், சமீபத்திலே யாழ்ப்பாணப் புதிய டிஸ்திறிக்நீதிபதியாக நியமனஞ்செய்யப் பெற்றவருமான திரு. பி. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் சென்றவியாழக்கிழமை யாழ்ப்பாணம்வந்துசேர்ந்து தமது புதியஉத்தியோகபதவியைக் கையேற்றிருக்கின்றார். முதனாள் அவர் கொழும்பிலே கோட்டைறெயில்வேஸ்ரேஷனிலிருந்து தமதுபாரியார் சமேதராகப் புறப்பட்டபோது அரசாங்க உத்தியோகஸ்தர்களும், நண்பர்களும், வழக்கறிஞர்கள்முதலானோரும் திரளாக நின்று அவரைப் பயணமனுப்பிவைத்தார்கள்.

### அர்ச். பத்தாம்பத்திநாதர் திருநாள்

திருச்சபையின் ஆறுபுதிய அர்ச்சியசிஷ்டர்களில் ஒருவரான அர்ச். பத்தாம் பத்திநாதரின திருநாள் நாளை 20-ந்திகதி வெள்ளிக்கிழமை கத்தோலிக்க உலகமுழுவதிலும முதன்முறையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

### மரியாயின் மகாநாடு

மரியாயின் புனிதவருடத்தைப் பிரஸ்தாபமாகக் கொண்டாடுமுகமாகச சலாபமேற்றிராசனத்திலே மரியாயின் மகாநாடொன்று வருகிறபுரட்டாசி மாதம் 3-ம 4-ம் 5-ம திகதிகளில் நடந்தேறவிருக்கிறது. இந்தப்பெரிய மகாநாட்டுவிழாவைக் கொண்டாடுமுகமாக நாத்தாண்டியாவிலுள்ள பரிசுத்த லூர்துநாயகியின் திருசேத்திரம் தெரியப்பட்டிருக்கிறது. தேவனின் அமலோற்பவமரியாயிலே மக்கள்கொண்டுள்ள பக்திப்பற்றுதலைப் பகிரங்கமாகக் காண்பிக்கும் ஓர்வைபவமாக அதனை நடத்திவைப்பதற்கான ஆயத்தங்களெல்லாம் அங்குபெருமிதமாக நடைபெற்றுவருகின்றன.

### ஆகாயப் பிரயாணவசதி

இலங்கையிலே உள்நாட்டு ஆகாயப் பிரயாணவசதிகள் சாதாரண ஆட்களுக்கும் கிடைக்கக்கூடியதாய் விரைவிலே செய்யப்படவிருக்கின்றன. இதுவிஷயமாய் இலங்கை விமானக்கழகம் மைல் ஒன்றுக்கு 10முதல் 12சதவீதமான சலாரிலே உள்நாட்டுஆகாயப்பிரயாண சேவையைநடத்த உத்தேசிக்கின்றது. இந்தப்பிரயாணசேவை கொழும்பிலிருந்து அம்பாறை, மின்னேரி, திரிகோணமலைவழியாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெறும்போல இருக்கிறது. இந்த ஆகாயப்பிரயாணசேவை செலவுக்குக்கட்டவும், சனங்களைக் கவரவும்தக்கதாகச் சலார்வீதம் குறைக்கப்படவேண்டுமென்றும், அதுநாளாந்த சேவையாக நடைபெறவேண்டுமென்றும் அதிகாரிஒருவர் கூறியிருக்கின்றார். தற்போது விமானகழகம் எட்டுப்பேர் அமரக்கூடிய இருவிமானங்களையும், மற்றும் ஒருதொகையான சிறுவிமானங்களையும் கொண்டிருக்கிறது.

### கிட்டங்கியிலுள்ள புகையிலை

யாழ்ப்பாணம் — மலையாளம் புகையிலைக்கூட்டுறவு விற்பனவுச்சங்கத்தின் தலைவரான திரு. ரி. சி. இராசரத்தினம் அவர்கள் சங்ககாரியதரிசி திரு. கே. நடராசா, யாழ்ப்பாணக் கூட்டுறவு அபிவிருத்தி உதவிக்கம்மிஷனர் திரு. சி. எஸ் குக் என்பவர்களுடன் திருவாங்கூர் சென்றிருக்கின்றார். 1953-ம் ஆண்டு ஆடிமாதம்செய்யப்பட்ட புதுடில்லிஒப்பந்தப்படி, 1,666 கண்டி, யாழ்ப்பாணப்புகையிலையை அனுப்பிவைக்க இறக்குமதிலைசென்ஸ் பெறுவதுபற்றியே இவர்கள் திருவாங்கூர் சென்றிருக்கிறார்கள். இந்திய அரசாங்கம் ஒப்பந்தத்தை நடைமுறைக்குக்கொண்டுவருவதில் தாமதம்ஏற்பட்டுள்ளதால்யாழ்ப்பாணக்கிட்டங்கிகளில் கிடக்கும் சுமார்பத்துலட்சம்ரூபா பெறுமதியான புகையிலையைச் சங்கம் திருவாங்கூருக்கு அனுப்பிவைக்க முடியாதிருக்கிறது.

### நேர்ஸ்மாரின் திருயாத்திரை

இலங்கைக் கத்தோலிக்க நேர்ஸ்மாரின் ஆதரவில் நேர்ஸ்மாருடைய மரியாயின்வருட திருயாத்திரைஒன்று இந்தஆவணிமாதம் 6-ந்திகதியன்று மடுமாதாவின் திருசேத்திரத்திற்கு நடந்தேறியது. கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணமுதலாம இடங்களிலிருந்து 119 நேர்ஸ்மார் இந்தயாத்திரையிலே கலந்துகொண்டனர். கொழும்புக் கிளைச்சங்கத்தின் ஞானவிசாரணைத்தலைவர் வண. கிறுவக்கோர் சுவாமியவர்கள் திருப்பதியில் பாடற்பூசை நிறைவேற்றினர் வண. ஏ. மைக்கேல்சாமி சுவாமியவர்கள் பிரசங்கம்செய்தனர். கண்டி ஆஸ்பத்திரி விசாரணைக்குரவர் வண. பொன்பிலியஸ் பஸ்ரியன் சுவாமியவர்கள் திருமணித்தியாலம் நடத்தினர்.

### எக்ஸ்பிறெஸ் றெயின்வண்டிகள்

இந்த ஆவணிமாதம் 30-ந் திகதி முதல் ஓடவிடப்படவிருக்கும் எக்ஸ்பிறெஸ்றெயின்வண்டிகளுக்குச் சுதேச நாமங்கள் இடப்படவிருக்கின்றன. கொழும்பு—கண்டி எக்ஸ்பிறெஸ்றெயின் வண்டிக்கு "மகாநுவரை எக்ஸ்பிறெஸ்" என்றும், கொழும்பு—மாத்தறை எக்ஸ்பிறெஸ் றெயினவண்டிக்கு "றுகுணை எக்ஸ்பிறெஸ்" என்றும், கொழும்பு—காங்கேசன்துறை எக்ஸ்பிறெஸ்றெயின் வண்டிக்கு "யாழ்ப்பாண எக்ஸ்பிறெஸ்" என்றும் நாமமிடப் போக்குவரத்துமந்திரியார் தீர்மானித்திருக்கின்றார். இந்தறெயின் வண்டிகளுக்கு மின்சார டீசல் எஞ்சின்கள் மாத்திரமே உபயோகிக்கப்பட வேண்டுமென றெயில்வேஅதிகாரிகள் தீர்மானித்திருக்கின்றார்கள். அதற்குக்காரணம், நீராவியந்திரங்கள் தாமதத்தைஉண்டுபண்ணுமென்பதேயாகும்.

### மட்டக்களப்பில் மாட்டுரோகம்

மட்டக்களப்புப்பிரிவிலே ஏறக்குறைய ஐயாயிரம் மாடுகள் கோமாரி எனும தொற்றுநோய்கண்டு, ஏற்கனவே அவற்றில் 400 மாடுகள் இறந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. கல்முனைப்பகுதியிலும் இந்தநோய்பரவாது தடுப்பதற்காகக் கமத்தொழிற்பகுதி அதிகாரிகள் பெரிதும்முயற்சியெடுத்து வருகின்றார்கள். மாடுகளின் நடமாட்டத்தைத் தடுக்கும்பொருட்டு மாட்டுரோகங் கண்டிருக்கும் காரியாதிகாரிகளின் பகுதிகளில் காவற்காரரை நியமனஞ்செய்யக் கீழ்மாகாணஏசன்றர் அனுமதிசெய்திருக்கின்றார்.

### ஊர்வலம்பற்றிய ஆலோசனை

சமயசம்பந்தமான ஊர்வலங்கள் அமைதியாக நடைபெறுவதற்கான நடவடிக்கைகள்பற்றிச் சகலசமயத்தவர்களினதும் தலைவர்களுடன் கலந்து ஆலோசிக்கும் நோக்கமாகப் பிரதமர் ஜோன் கொத்தலாவல அவர்கள் அவர்களையெல்லாம் நாளைத்தினம் ஓர்மகாநாட்டுக்கு அழைத்திருக்கின்றார். சமயசம்பந்தமான ஊர்வலங்கள் சமயவழிபாட்டுக்குரிய இடங்கள்வழியாகச் செல்லும்போது வாத்தியகோஷ்டத்துடன் செல்லவேண்டுமாஎன்பதே இம்மகாநாட்டில் ஆலோசிக்கப்படவிருக்கும் மிகமுக்கியமான ஓர்விஷயமாகும்.

### பிரதமரின் யாழ்ப்பாணவிஜயம்

வருகிறபுரட்டாசிமாதம் 28-ந்திகதியன்று யாழ்ப்பாணத்திற்கு முதன்முறையாக அதிகாரபூர்வமாய் விஜயஞ்செய்து ஐப்பசிமாதம 2-ந்திகதிவரையிலே யாழ்ப்பாணக்குடாநாட்டில் சுற்றுப்பிரயாணஞ் செய்யவிருக்கிற பிரதமர் சேர் ஜோண் கொத்தலாவல அவர்களுக்கு ஓர்பொதுசனவரவேற்பு அளிக்கவேண்டுமென சென்றசனிக்கிழமைகாலை யாழ்ப்பாணக்கரமண்டபத்தில் நடந்தேறிய பொதுக்கூட்டம் ஒன்றில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. வடமாகாண ஏசன்றர் எம். ஸ்ரீகாந்தா அவர்களது அழைப்பின் பேரிலே இப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதற்குத தமிழ்மந்திரியான சேர் கந்தையா வைத்தியநாதன், திரு. எஸ். நடேசன என்பவர்களும, பாராளுமன்றப் பிரதிநிதிகளான திரு. ரி. இராமலிங்கம், திரு. சி. சிற்றம்பலம், திரு. வி. வீரசிங்கம், செனற்றர் எஸ் ஆர் கனகநாயகம் ஆகியோரும், மற்றும்திரளான பிரமுகர்களும் சமுகமளித்திருந்தார்கள். அரசாங்க ஏசன்றர் தலைமையிலே 130பேரைக் கொண்ட வரவேற்புக்கம்மிற்றிஒன்று தெரிவுசெய்யப் பட்டிருக்கிறது. வரவேற்புக்கம்மிற்றியின் இணைக்காரியதரிசிகளாகத் திரு. எ. ஈ. தம்பர், திரு. சி. அம்பலம், திரு. எம். ஆர். காராளசிங்கம்என்பவர்களும், இணைத்தனாதிகாரிகளாக முகாந்திரம் வி. மகேசன், நகரசபை அங்கத்தவர் ரி எஸ். துரைராசாஎன்பவர்களும தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

### யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு

வருடத்திலே இரண்டாம்முறையாக நடந்தேறும் யாழ்ப்பாணச் சுப்பிறீங்கோடு இம்மாதம 23-ந் திகதியாகிய வருகிறதிங்கட்கிழமை யாழ்ப்பாணடிஸ்திறிக்கோட்டுக்கட்டடத்தில ஆரம்பமாகும். சங். எம். சி. சன்சோணி நீதியரசர்வந்து விசாரணைநடத்த விருக்கின்றார். இம்முறைஅதிலே விசாரணைக்கிருக்கும் வழக்குகள் பதினைந்து. இவற்றிலே பதினொன்றும் கொலைவழக்குகள்.

### பரிதாப கார்விபத்து

கதிர்காமத்திலிருந்து திரும்பிய கார் ஒன்று சென்றசனிக்கிழமைகாலை கொழும்பிலே சனப்பிரதிநிதிகள்சபைக்குச் சுமார் ஐம்பது யார்தூரத்தில் பேரையாறு கடலுடன்கலக்கும்இடத்திலுள்ள சம்பிவேலியை ஊடறுத்துக் கொண்டுபாய்ந்து கடலுள்மூழ்கியகாரணமாக அதில்இருந்தஐவர் நீரில்மூழ்கி இறக்க, தேவாதீனமாக விபத்துக்குள்ளானகாரின் சக்கரத்தைப் பற்றிப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருந்த மற்றொருவரான எம். ஏ. திசநாயக்கஎன்பவர் மீட்கப்பட்டு ஆஸ்பத்திரியில் ஆபத்தானநிலைமையில் இருந்துவருகின்றார். காரின்கதவுகள் பலவந்தமாகத்திறக்கப்பட்டு இறந்தஐவரினதும் பிரேதங்கள் வெளியேற்றப்பட்டன. பிந்தவெகுகஷ்டத்துடன் இழுத்தெடுக்கப்பட்ட காருக்குள் பணமாக 570ரூபாவும், இருசாராயப்போத்தல்களும, அன்னாசிப் பழங்களும், மாக்கறிகளும், பிறவும் இருக்கக் கண்டெடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதோ! நீகேட்ட பரிசை அளித்தேன்

அன்று, உரோமைப் பேரரசின் ஏகப்பிரதிநிதியாகக் கலிலேயாநாட்டை ஆண்டுவந்த ஏரோதுமன்னனின் பிறந்தநாள். மாலைப் பொழுதிலே, மதிமயங்கும் வெண்ணிலா வேளையிலே மன்னன் ஏரோதனின் மாளிகையில் விருந்து நடக்கிறது. மதியூகிகளும், மந்திரிகளும், வாளேந்திய வீரர்களும், உயர்குடிப் பிரபுக்களும் குழுமியிருக்கின்றனர். அறுசுவைமிகுந்த உண்டிகள் படைக்கப்பட்டிருக்கின்றன. மதுக்கிண்ணங்களில் மதுவகைகள் ததும்பி வழிகின்றன. அபமட்டா! ஆடல் அழகிகள் அங்கங்கே ஆடுகின்றனர். பணிப்பெண்கள் பலவித கருவிகளில் பண் இசைக்கின்றனர். மன்னன் ஏரோது மங்கையர் சூழ்ந்திருக்க, மதுக் கிண்ணங்களின் மத்தியில மனோகரமாக வீற்றிருக்கிறான். அவன் முன்னிலையிலே.........

கற்பனைக்குமெட்டாத கவின் அழகு படைத்த ஒருகன்னி ஆடிக்கொண்டிருக்கிறாள். தங்கச்சிலை போன்ற பொற்கொடியாள் அவள். கண்டவர் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் அழகுடையாள். மயக்குமகருவிழியாள். மாயப்புன்னகையாள். ஆனால், தனது அலங்காரமினுக்கிலே தன்வஞ்சகஎண்ணத்தை மூடிமறைத்துக்கொண்டிருக்கிறாள் அந்நங்கை.

மதுமயக்கத்தில் மூழ்கியிருக்கும் மக்கள்கூட்டமெல்லாம் நடனகாரியின் நடனத்தில் மனதைப்பறிகொடுத்து, உணர்வற்றுக்கிடக்கிறது. மன்னனின் மகிழ்ச்சியோ எல்லைக் கோட்டைத் தாண்டிவிடுகிறது. அவன் மதுக்கிண்ணங்களை ஒன்றோடொன்று அடித்துத் தாளம்போட்டுத் தலையை ஆட்டியபடியே ஆட்டத்தை ரசித்துக்கொண்டிருக்கிறான். மதுவின்போதை மண்டையில் ஏறஏற அவன்மகிழ்ச்சியும், ஆரவாரமும் அதிகரித்துக்கொண்டேயிருக்கின்றன. நடனகாரி ஆடிக்கொண்டுதான் இருக்கின்றாள். அப்போது அங்கு கூடியிருந்த அத்தனை பேரையும் தன் மனம்போல ஆட்டுவிக்கமுடியும் அவளால். அவளது கண்வீச்சிலே அவள் கனவுகள் நனவாகும். கைஅசைவிலே அவள் ஆசைகள் அனைத்தும் நிறைவேறும். இதழ்ச்சிரிப்பிலே அவளது எண்ணங்களெல்லாம் ஈடேறும். சட்டென்று ஆட்டத்தை நிறுத்தினாள் பாவை.

"ஏன் நிறுத்திவிட்டாய்? நிறுத்தாதே, நிறுத்தாதே, ஆடு" என்று மன்னன் கூறுகிறான். நாட்டிய நங்கையோ நாணிக்கோணி நிற்கிறாள். மாளிகையே அதிரும்படி மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றனர் மதுபோதையில் மயங்கிக்கிடக்கும் மக்கள்.

"பெண்ணே!" என்று அழைத்துக் கொண்டு அவளை நெருங்குகிறான் மன்னன். "மகிழ்ந்தேன், உன் அற்புத நடனம்கண்டு; நடனமயிலே! கலைஉன்னிடம் கொஞ்சலாடுகிறது; அழகு உன்னிடத்தில் தாண்டவமாடுகிறது; நீ கலாதேவியின் சிங்காரசிருஷ்டி; நான் மன்னன்என்றாலும் வெறும்ரசிகன்; நீயோ இங்குமயங்கிக்கிடக்கும் அத்தனைபேரின் உள்ளங்களிலும் களிநடனம்புரியும் கலைராணி; கலைவாணியே! என் அன்புப்பரிசாக நீஎதைவிரும்புகிறாய்? கேள்; எதுவேண்டுமானாலும் கேள்; தயங்காதே, தாராளமாய்க்கேள்."

ஆடல்நங்கை ஆயாசப்படுகிறாள். சுற்றும்முற்றும் பார்க்கிறாள். வேறு இருகண்கள் அவள்கண்களைச் சந்திக்கின்றன. துணிவும்பிறக்கின்றது பரிசைக்கேட்க. ஆனாலும் தயக்கம்.

"நங்காய்! ஏன் தயங்குகிறாய்? கேள்; தைரியமாய்க்கேள்; உனக்கு எதுவேண்டும்" என்று மன்னன் அதிகாரத்தோடு பேசுகிறான்.

கைவிரல்களை வாயில்வைத்து மருள மருள மன்னனைநோக்குகிறாள் நங்கை. அவள் மருள்வதைக்கண்டு மன்னன் 'கலகல'வென்று சிரிக்கிறான், 'இவள் ஏன் இப்படிப் பயப்படுகிறாள்' என்ற எண்ணத்தோடு. ஆனால், அவ்வளவும் வெறும் பாசாங்கேஎன்று அவனுக்கு எப்படித்தெரியும்?

"பெண்ணே! மானைப்போல் ஏன் இப்படிமருளுகிறாய்? ஒருவேளை என் வார்த்தைகளில் உனக்குஐயமோ? ஐயப்படவோ, அதைரியப்படவோ வேண்டாம்கேள்; உனக்கு எதைநான் பரிசாகஅளிக்கவேண்டும் என்றுகேள்; பரிசு எதுவாகஇருந்தாலும் சரி, பரந்த இக்கலிலேயாநாட்டின் பாதிப்பகுதியானாலும்சரி, கொடுக்கிறேன் கேள்; வாய்திறந்து கேள்" என்று மன்னன் கம்பீரத்தோடு பேசுகிறான்.

"எனக்கு.........உம்.........."

"உம்.........உனக்கு.........."

"சிறையில்......நீர்...அடைத்து......வைத்திருக்கும்......அருளப்பர்......"

"அருளப்பர்வேண்டுமா? ஹ ஹா! அருளப்பராவேண்டும்? பேதைப் பெண்ணே! அரைமனிதனும் அரைமிருகமுமாக வெட்டுக்கிளியும் கொம்புத்தேனும்உண்டு காட்டில் திரிந்துவருகிற கிழவனிடமா உன்உள்ளத்தைப் பறிகொடுத்தாய்? ஹ ஹா!"

மன்னனின் ஏளனச்சிரிப்பு நடனப்பெண்ணுக்குக் கோபமூட்டுகிறது.

பிறகும் "என்னவேண்டும்?" என்று கேட்கிறான் மன்னன்.

"அந்தஅருளப்பரின் தலை."

வானம்இடிந்து தன் தலைமேல் விழுந்ததுபோன்று அதிர்ச்சிஅடைகிறான் மன்னன். மதுப்போதையினால் இன்பக்கனவுலகத்தில் சஞ்சரித்திருந்தவனைக் கருநாகம்தீண்டினதுபோல் துள்ளிவிடுகிறான், நடனப்பெண்ணின் பதிலைக்கேட்டு. சற்றும் எதிர்பார்க்கப்படாத பரிசுப்பொருள். மன்னனின் மனம் குழம்பிவிடுகிறது.

"என்ன பரிசுகேட்டாய்? அருளப்பரின் தலையா? அந்தமகானின் தலையைக் கொய்துகொடுக்கும்படியா கேட்கிறாய்? பெண்ணே! உன்புத்தி பேதலித்துவிட்டதா? அல்லது என்னோடு விளையாடஎண்ணுகிறாயா?" கோபமாகவே பேசுகிறான்மன்னன்.

"புத்திபேதலித்து நான் பேசவில்லை அரசே! அறிவுணர்ச்சியோடுதான் பேசுகிறேன். எனக்கு அருளப்பரின் தலைதான் பரிசாகவேண்டும்."

'அருளப்பரின்தலை! அருளப்பரின் தலை!' மாளிகையின்சகலதிக்கிலும் எதிரொலிக்கின்றது அச்சொல். மன்னன் திகைக்கிறான், சித்தம் தடுமாறுகிறான். அவனது குடிப்போதை இருந்தஇடம் தெரியாதுமறைந்துவிடுகிறது. 'ஆ, அருளப்பரின் தலையா! அந்தப் புனிதனின் தலையாகொய்யவேண்டும்! நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கு வழிகாட்டியான அத்தியாகமூர்த்தியின் தலையையா இவள் கேட்கிறாள்! அருளப்பர் யாருக்கு என்னதீங்கு செய்தார்? யாரைவஞ்சித்தார்? யாரைத்துன்புறுத்தினார்? அவர்தலையா பரிசாகவேண்டும்! என்ன பயங்கரம்! இவளென்ன பெண்ணா? அல்லது பெண்உருவத்தில்வந்தபேயா?

"என்னஅரசே! ரொம்பவும் சிந்திக்கிறீர். சற்றுமுன்தானே சொன்னீர், எதைப் பரிசாகக்கேட்டாலும் தருகிறேன்என்று; இவ்வளவுதானா உமதுபேச்சுக்கு மதிப்பு?" நகையாடுகிறாள் நடனப்பெண்.

"இல்லை, —உம்...இல்லை." மன்னன் மருளுகிறான். யாதுபதில் கொடுப்பதுஎன்று அவனுக்குத்தோன்றவில்லை. மன்னனின் நிலையைக்கண்டு நகையாடி

(தொடர்ச்சி [illegible])

# மாசற்ற குடும்பத்தின் தேசுற்ற பாலியர்

தோமினிக் சவியோ 1842-ம் ஆண்டு சித்திரைமாதம் 2-ந் திகதி இத்தாலியின் வடபாலுள்ள பியெட்மண் பகுதியிலே ஓர் ஏழைக்குடும்பத்தில் உதித்தார். அந்தக்குடும்பம் மாசற்ற கிறீஸ்தவஒழுக்கத்திற் சிறந்துவிளங்கியது. பிள்ளைப்பராயத்திலேயே தேவனைப்பற்றியஅறிவை அவர் தனதுபெற்றோரிடமிருந்து கற்றார். தான் தேவனுக்குச் செய்யவேண்டிய சேவைகளைப்பற்றியும் உணர்ந்தார். பின்னர் எதுபிழை, எதுசரி; எதுநன்று, எது தீதுஎன்று உணர்த்தும் பகுத்தறிவு அவர்மனதைப் பக்குவப்படுத்தியது. இவ்வாறு அவர்பச்சிளம்மனதில் பதிந்தவை அவரது ஆத்துமசக்தியுடன் இரண்டறக்கலந்தன. அவரது சித்தத்தைத் திடப்படுத்தி அவர் சரியெனக் காண்பவற்றைக் கடவுளுக்குக் களிப்பூட்டும்முறையிற் செயலாற்றச் செய்தன.

தோமினிக் பச்சிளம் பாலகனாய் இருக்கும்பொழுதே அமலன் அவனுக்கு அளவற்ற வரப்பிரசாதங்களை வாரிவழங்கினார். இதன் தன்மை அவரது பாலப்பருவத்திலேயே எண்ணற்ற வழிகளிற் புலப்பட்டது. அதுவே அவர்புண்ணியத்தில் வளர்வதற்கு அத்திவாரமாயும் அமைந்தது. பின்னர் கடவுளின் கடாட்சத்தால் அவர் ஓர் அர்ச்சியசிஷ்டரானார்.

தோமினிக்கின் புத்திக் கூர்மையைக்கண்டு அவர்தந்தை பூரிப்படைந்தார். கல்வியின்மட்டிலே அவருக்கிருந்த ஊக்கத்தைக்கண்டு அவர்களிப்படைந்தார். அக்காலத்திலே தொன் பொஸ்கோஎன்னும் ஓர்பரிசுத்தகுரவர் ஓர்ஸ்தாபனத்தை நிறுவினார். தகுந்த பிள்ளைகளையே அந்தமடத்திற் சேர்த்துக்கொண்டார். தோமினிக்கின் தந்தை இதைஅறிந்தார். தனதுபுதல்வரையும் அவரிடம் அழைத்துச்சென்றார். தொன்பொஸ்கோ ஓர்புண்ணியசீலர். அவர் பரிசுத்தர்களாகக்கூடிய பிள்ளைகளை இலகுவில் அறிந்துகொள்ளும் ஆற்றல்படைத்தவர். "அகத்தின் அழகு முகத்திற்தெரியும்" என்பார்களே. அவர் தோமினிக்கை முதன்முறை சந்தித்தமாத்திரத்திலேயே அவரதுகுணநிசயங்களைப் புரிந்துகொண்டார். ஆகவே, அவரை ஒருதடையுமின்றித் தமது மாணவருள்ஒருவராய் ஏற்றுக்கொண்டார்.

தோமினிக் முதன்முறை தொன் பொஸ்கோவை அவரது அலுவலகத்தில் சந்தித்தபோது ஓர் முக்கியசம்பவம் நிகழ்ந்தது. அதிலிருந்து தோமினிக்கின் கல்விபற்றிய அபிப்பிராயத்தையும், அவரை என்னதுறையில் வழிப்படுத்த எண்ணினார்என்பதையும் ஊகித்துக்கொள்ளலாம். தொன்பொஸ்கோவின் அலுவலகச் சுவரொன்றில் ஓர் வாக்கியம் இலத்தீனில் பொறிக்கப்பட்டிருந்தது. அதைத் தோமினிக்கண்டார் அதன்கருத்தை விளக்கும்படி தொன்பொஸ்கோவை அதிவிநயமாகக் கேட்டார். "உங்கள் ஆன்மாக்களை மட்டும் நான் சுவீகரித்துக்கொள்ள விடுங்கள்; மற்றவைகளைக் கொண்டு நீங்கள்விரும்பியதைச் செய்துகொள்ளலாம்" என்பதே அதன்கருத்துஎன்று தொன்பொஸ்கோ கூறினார்.

"ஆ! உண்மையை உணர்ந்தேன்; இந்தமடம் செல்வம்சேர்க்கும் நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்படவில்லை; என்போன்றவரை நல்வழிசேர்க்கவே உண்டானது" என்று அந்தப் பன்னிரண்டு வயதுப் பாலியர் மனஎழுச்சியோடு கூறினார்.

"உண்மையைக் கூறினாய்; உன்னதபண்பின் உறைவிடமாய் நீ இருப்[illegible]றேன்" என்று உரைத்தார் அந்த உத்தமகுரவர் தொன்பொஸ்கோ.

"அப்படியாகில் என்னை எங்கள்ஆண்டவரின் ஓர்அழகிய அணிகலமாக்கிவிடுங்கள்; நான் அவருடையவன் என்பதை என்பெயரே குறிக்கின்றது" என்று ஆர்வம்பொங்க ஆர்ப்பரித்தார் தோமினிக்.

தொன்பொஸ்கோவின் 'சிற்றாலயம்' என்று பெயர்பெற்ற அந்தமடத்திலேயே தோமினிக் நான்குவருடகாலமாக மாணவவாழ்க்கை நடத்தினார். தனது புனித வளர்ச்சிக்கேற்ற ஞானத்தையும், அறிவையும் அபரிமிதமாய்ப் பெற்றார். ஆனால், இவைகள்எல்லாம அவருக்கு முற்றிலும் புறம்பானவையும், புதுமையானவையுமல்ல. நாங்கள் நடத்தும் சாதாரண வாழ்க்கையிலிருந்தே அர்ச்சியசிஷ்டர்களாக வேண்டும் என்பதே சர்வேசுரனுடைய சித்தமாம். தோமினிக் சவியோ ஓர்மாணவ அர்ச்சியசிஷ்டர் ஆகவேண்டும்என்று ஆண்டவர் விரும்பினார். மரிக்குமளவும் அவர் ஓர்மாணவனாகவே வாழ்ந்தார். மாணவ வாழ்க்கையிலேயே அர்ச்சியசிஷ்டர்ஆவதற்கு வேண்டிய புண்ணியக் கிரிகைகளைப் புரிந்தார்.

இச்சிறுகட்டுரையில் தோமினிக் சவியோவின் மாணவவாழ்க்கைவரலாற்றை விவரிப்பது எளிதன்று. அவரது ஞானத்தந்தை தொன்பொஸ்கோ ஏற்கனவே அதை நமக்கு எழுதிவழங்கியுள்ளார். தமது மாணவர் இறந்ததை அறிந்ததும் தொன்பொஸ்கோ அவரது குறுகியகால எளியவாழ்க்கையை எப்படிநடத்தி முடித்தார்என்பதை விபரமாகஎழுதி வெளியிட்டுள்ளார். அது ஓர்சிறந்த அர்ச்சியசிஷ்டரால் எழுதி வெளியிடப்பட்ட இன்னொரு அர்ச்சியசிஷ்டரின் சீவியசரிதை. அதை வாசித்துப்பாருங்கள். சிந்தனைக்குரிய சிறந்தஉணவை அதில் காண்பீர்கள். எப்படி ஓர்எளியமாணவர் — சுவர்கள் சூழ்ந்த ஸ்தாபனத்தின் சூழ்நிலையில் வாழ்ந்த பதினைந்துவயது நிரம்பாத பாலியர் அர்ச்சியசிஷ்டபட்டம் திருச்சபையால் அருளப்பட அருகரானார் என்பதைஅறிய ஆருக்குத்தான் ஆவலாயிராது!

தோமினிக் சவியோ தனதுமேற்பார்வையாளருக்கு மிக்ககீழ்ப்படிதலுள்ளவராயிருந்தார். வகுப்புப்பாடங்களைப் படிப்பதில் அயராமுயற்சி உள்ளவராய்த் திகழ்ந்தார். அவர் எப்பொழுதும் பக்திவிநயத்துடன் செபிப்பார். தேவநற்கருணையில் எழுந்தருளிய யேசுநாதரிடத்தும், அன்னைமரியாயிடத்தும் அவர் தணியாதஅன்பும், அலையாதநம்பிக்கையும் கொண்டுவிளங்கினார். பாப்பரசரிடத்துப் பிறழாப் பற்று அவருக்கிருந்தது. இத்தகைய அவரதுபண்பட்ட கிறீஸ்தவப் புண்ணியப்பழக்கங்கள் விளையாட்டுமைதானத்தில் அவருக்கிருந்த உற்சாகத்தைக் குறைக்கவில்லை. உடன்மாணவர்களுடன் அவர்பேசும் நகைச்சுவையான வார்த்தைகளை அகற்றவில்லை. தங்கள் சொந்தவீட்டை நினைந்து வருந்தும் பிள்ளைகட்கு அவர்கூறும் பரிவான வார்த்தைகளையோ, அன்றேல் அவர்கள்மீது கொண்டுள்ள அன்பையோ சற்றேனும் பாதிக்கவில்லை.

அன்று தோமினிக் சவியோ ஒரு சாதாரண பள்ளிச்சிறுவராய் இருந்தார். ஆனால், இன்றுஅவர் ஒருசாதாரண மாணவஅர்ச்சியசிஷ்டர் ஆகிவிட்டார். அவரது எளியசாதனை எவ்வித மாணவனும் பின்பற்றக்கூடிய உதாரணமாக விளங்குகின்றது. அவரைப் பின்பற்றுவதற்குத் துறவுபூண்டு கடுந்தபம்புரிய வேண்டியதில்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாயின்வருடத் திருயாத்திரை

குருமார், குருத்துவமாணவர், சர்வகலாசாலை மாணவர்களும், ஏனையவர்களுமாகச் சுமார் 60 பேரை அடக்கியதான மரியாயின்வருட இந்திய யாத்திரைக் கோஷ்டி வருகிற புரட்டாசி மாதம் 7-ந் திகதி ஆகாயவிமானத்திலே ரோமாபுரி செல்லவிருக்கின்றது. இவர்கள் அங்கு சேர்ந்தமறுநாள் ஆரம்பமாகவிருக்கும் மரியாய்சபைகளின் மகாநாட்டுக்குச் சமுகமளித்தபின் ஐரோப்பியநாடுகளிலும், பிரித்தானியிலுமுள்ள மரியாயின் திருசேத்திரங்களைத் தரிசிப்பார்கள். வண. முத்துமாலை சுவாமியவர்களே இந்த யாத்திரைககுத் தலைமைவகித்துச் செல்லவிருக்கின்றார். யாத்திரிகர்கள் ரோமாபுரியிலுள்ள பல்வேறு முக்கியமான தலங்களையும் தரிசித்தபின் பீசாநகர்வழியாக ஜெனேவாநகர்சென்று, அங்குள்ள பேரான ஆசனக் கோவில்மீது இரண்டாவது உலகயுத்தத்தில் வீசப்பட்ட வெடிகுண்டு வெடியாமல் இன்னமும் அந்தப்படியே இருந்துவரும் அற்புதகாட்சியைக் கண்டுகொள்வார்கள்.

## திருமுடி சூடவிருக்கும் மாதா

தேவதாயார் ஆத்துமசரீரத்துடன் பரலோகத்துக்கு ஆரோபணமானார்என்பது விசுவாசசத்தியமாக நிர்ணயித்துப் பிரகடனஞ்செய்யப்பெற்ற நான்காவதுவருட நிறைவுதினமாகிய வருகிற கார்த்திகை மாதம் 1-ந் திகதியன்று பாப்பரசர் சர்வலோகஇராக்கினியான தேவமாதாவின் திருநாளைப் பிரசித்தஞ்செய்தருளுவார். இந்தத் திருநாளைக் கொண்டாடுந் தினமாக வைகாசிமாதம் 1-ந் திகதி குறிக்கப்படும்போல் இருக்கிறது. ரோமாபுரியிலே ஐப்பசி மாதம் 24-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச மரியாயின் மகாநாடு முடிவடையும் அன்றுதானே இத்திருநாள் பிரசித்தஞ்செய்யப்படும். அதனை மகிமைப்படுத்தும் ஓர்வைபவமாகப் பாப்பரசர் சம்பேதுருவானவர் மகாலயசதுக்கத்திலே, உலகில் தேவஅன்னையின் பேராலுள்ள பிரதான திருசேத்திரங்களிலிருந்துபோய் அங்கு ஒன்றுகூடவிருக்கும் தூதுக்கோஷ்டிகளின் சமூகத்திலே, ரோமைநகரின் மகாபூசிதமானதொன்றாய்ப் பாதுகாக்கப்பட்டுவரும் மரியாயின் திருப்படம் ஒன்றுக்கு மணிமுடி சூட்டியருள்வார். "ரோமன்மக்களின் ஈடேற்றம்" என அறியப்படுகின்ற இந்த ஓவியத்தில் விளங்கும் மாதாவின் திருஉருவத்துக்குமேலாக அவர்நவரத்தினங்கள் இழைத்த ஓர்மணிமுடியை வைப்பார். மாதாவின் இந்தச்சித்திரப் படம் அர்ச். லூக்காவாலே வரையப்பட்டதெனப் பாரம்பரியமாக அறியப்பட்டுவருகிறது. அர்ச். ஏலேனம்மாள் திருமீட்பரின் உண்மையான திருச்சிலுவையைப் பரிசுத்தநாட்டில் தேடிக்கொண்டிருந்தபோது அவ்வர்ச்சியசிஷ்டவளால் இது கண்டெடுக்கப்பட்டதென்று சொல்லப்படுகிறது.

## பாப்பரசரின் விடுமுறை

பரிசுத்தபாப்பரசர் அன்பான்குன்றுகளிலுள்ள காஸ்ரெல் காண்டல்போவில் அமைந்திருக்கும் தமது வேனிற்கால வாசஸ்தலத்திற்குச் சென்ற ஆடிமாதம் 31-ந் திகதி சென்றிருக்கின்றார். இததாலிய மோட்டர்சைக்கிள் பொலிஸ் வீரர் முன்செல்ல, பாப்பரசின் பாதுகாப்புப்படை அதிகாரிகள் பின்தொடர, அவர் மூன்றுகார்களைக்கொண்ட ஓர்ஊர்வலத்தில் பிறர்அறியாது பயணஞ்செய்யலாயினர். காஸ்ரெல் காண்டல்போவிலே அதன் மேயரும், பட்டினசபை அங்கத்தவர்களும் பெருந்திரளானமக்களுடன் பட்டினஎல்லையில் காத்துநின்று அவரைவரவேற்றார்கள். தமது வாசஸ்தலத்தைச் சேர்ந்ததும அவர் மேயருக்கும், விசாரணைப் பங்சக் குரவருக்கும் பேட்டியளித்துவிட்டு, மேல்மாடிக்குச் சென்று கீழே வந்துகூடிநின்ற மக்களையெல்லாம் ஆசீர்வதித்தார். காஸ்ரெல் காண்டல்போவுக்குப் பாப்பரசர்செய்துள்ள பத்தாவதுவிஜயம் இதுவாகும். அவர் அங்குசென்றபோதிலும் அவரது நாளாந்த பாரமான கடமைகளில் யாதாமோர்மாற்றமும் ஏற்படமாட்டாது. ஆனல், திறந்தவெளியில் அதிகமான நேரத்தைச் செலவிடக் கூடியவராயிருப்பார்.

## தேவமாதாபக்தியும் ருஷியாவும்

சோவியற்ருஷியாவின் தேச எல்லைகளுக்குள் இருந்துவருகின்ற தேவதாயாரின் அற்புத திருப்படங்கள் அகராதிமுறையானவரிசையிலே மஸ்கோநகரிலுள்ள கிறீஸ்த பிரிவினைச் சபைப் பத்திறியாக்குவின் காரியாலயத்தால் புதிதாகஅச்சிடப்பெற்ற பஞ்சாங்கத்தில் பிரசுரஞ்செய்யப்பட்டிருக்கின்றன. இந்தஉண்மை ரோமாபுரியிலே யேசுசபையாரின் வெளியீடாகிய "லா சிவில்தா கத்தோலிக்கா" எனும்சஞ்சிகையில் "ருஷியாவிலே தேவமாதாபக்தி" என்பதுபற்றிய கட்டுரைஒன்றில் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. அதனைஎழுதிய பெரிய கல்விமானான வண. யு. ஏ. புளோறிடிசுவாமியார் அதிலே குறிப்பிட்டிருப்பது வருமாறு: "இன்றைய ருஷியாவில்தானும் தேவமாதாபக்தி இன்னுமே பலங்கொண்டிருக்கிறது; ருஷிய மக்கள் கன்னிமரியதாயார்மட்டிலே உருக்கமானபக்தி என்றைக்குமே காண்பித்திருக்கிறார்கள்; இந்தப்பக்தியானது ருஷியஎழுத்தாளர்கள், கவிஞர்களின் எழுத்துகள், கவிகளில் மாத்திரமல்ல, ஆனல், மரியாயின் திருசேத்திரங்களுக்கு நடைபெற்ற பயபக்திக்குரிய யாத்திரைகளிலுமே பிரத்தியட்சமாகக் காணக்கிடக்கின்றது; சமயத்தைஎதிர்த்து வேதகலாபனை நடைபெற்றுவந்தபோதிலும் தேவமாதாபக்தி ருஷியாவில் செழித்தோங்கிவளருகிற"தென அவர் தெரிவித்திருக்கின்றார்.

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## மரணதண்டனை பெற்றவர்

யேசுவின் திருஇருதய குருமார் சபையின் புதிய அதிசிரேஷ்டராய் ஓர்ஜேர்மனியரான வண. அலன்ஸ் வெலிக்சுவாமியார் தெரியப்பெற்றிருக்கின்றார். இரண்டாவது உலகயுத்தத்திலே இவர் ஐரோப்பிய கிழக்குப்போர்முனையில் பட்டாள விசாரணைக்குரவராகக் கடமை பார்த்துவரும்போது ருஷியரால கைதுசெய்து அடிமைத் தொழில் முகாம்ஒன்றில் சிறைவைக்கப்பட்டார். அதிலே இருந்துவரும்போது இவர் அந்தரங்கமாகத் தமது குருத்துவ பணியை ஆற்றிவர உபாயந் தேடிக்கொண்டார். இவர் ஓர் குருவானவரென்று கண்டுபிடிக்கப்பட்டதும் ஓர்வேவுகாரனெனக் குற்றஞ்சாட்டி மரண தண்டனை விதிக்கப்பெற்றார். ஆனல், தண்டனை நிறைவேற்றப்படுமுன் காட்டுக்குள் தப்பி மறைந்து கடைசியாக மாறுவேஷத்துடன் எல்லையைக் கடந்து மேற்குஜேர்மனி போய்ச்சேர்ந்தார்.

## சங். அல்போன்ஸா அம்மாள்

சங். அல்போன்ஸா கன்னியாஸ்திரி பரமபதமடைந்த 8-ம் ஆண்டுநிறைவுதினம் சென்ற ஆடிமாதம் 28-ந் திகதி புதன்கிழமை வந்துபோயிற்று. தூரமான இடங்களிலிருந்து யாத்திரிகர்கள் முந்தியதிங்கட்கிழமை முதல் அவளுடைய கல்லறை இருந்துவருகின்ற பாரனங்கானத்தைநோக்கிச் சரியத் தொடங்கினர்கள். 27-ந் திகதி சாயந்தரம் 30 பேருக்குமேற்பட்ட குருமாரும், சிலநோயாளர்கள்உட்படப் பெருந்தொகையானயாத்திரிகர்களும் அங்கு சென்றுகூடிவிட்டார்கள். 28-ந் திகதி அதிகாலை 2 மணிமுதல் அல்போன்ஸாவின் பக்தர்கள் கூட்டங்கூட்டமாகக் கீதங்கள் பாடிக்கொண்டும், செபமாலை ஓதிக்கொண்டும் அங்குள்ள சேமக்காலைச் சிற்றாலயத்திலும், அவளைச்சூழவரவும் தேங்கிநின்றார்கள். இந்தச்சிற்றாலயத்தில்தான் அவள்திருமேனி அடக்கஞ்செய்யப் பட்டிருக்கிறது. அச்சிற்றாலயத்தில் திவ்வியபூசை நிறைவேற்றவேண்டுமென்ற ஒரேகருத்துடன் ஐம்பது குருமாருக்குமேல் சென்றிருந்தும், பூசைகள் அதிகாலை 3 மணிமுதல் மத்தியானம் 12 மணிவரையில் நிறைவேறியிருந்தும் அரைவர்சிப்பேருக்குமேல் அவ்விதம் நிறைவேற்ற முடியாமற் போனார்கள். இருபதினாயிரம் பேர்வரையில் அன்றுதினம் அங்கு சமுகமாயிருந்தார்கள். 4,000 ஏழைகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## மரியகோறெற்றி விடுதி

இல்லிடமற்ற பெண்மணிகளுக்கென்று கனடாதேச மொன்றியல்நகரிலே ஆறுமாடிகளைக் கொண்டதாய்த் தற்காலமாதிரியான கட்டடங்களுடன் அமைக்கப்படடுவந்த மரியகொறெற்றி விடுதிச்சாலையானது பூர்த்தியாகின்றது. அந்நகரில வேலை செய்கிறவர்களாய் வீடுவாசல இல்லாது அந்தரிக்கும் பெண்மணிகளுக்கு ஏற்கனவே 225 அறைகள் கிடைக்கக்கூடியனவாகிவிட்டன. இந்தவிடுதியிலே பிழைப்பற்றவர்களும், வாழ்க்கைநடத்த வகையற்றவர்களுமான பெண்மணிகளுக்கும் வாசஸ்தலங்கள் இருந்துவரும். இந்தநிலையம் பூர்த்தியாகும்போது 600 பெண்மணிகள் தங்குவதற்குப்போதிய இடவசதிகளைக் கொண்டிருக்கும். இதிலே வாசஸ்தலங்களைத்தவிர, ஓர்சிற்றாலயமும், படனசாலைகளும், சங்கீதசாலையும், வாசிகசாலையும், பொழுதுபோக்குஞ்சாலைகளும், பிறவும்அமைந்திருக்கும்.

## ஐந்து புதியகோவில்கள்

ஜப்பானிலே ஐந்துபுதிய கத்தோலிக்க கோவில்களின் திறப்புவிழாவைச் சென்றஜூன் மாதம் கண்டிருக்கிறது. இவற்றில்ஒன்று ஜப்பானின் தலைப்பட்டணமாகிய ரோக்கியோ மாதாவுக்கு அர்ப்பணஞ்செய்யப்பெற்றதாகும். அத்தேசத்தில் இதுவரை கட்டப்பட்ட கோவில்களிலெல்லாம் இது மிகப்பெரியது. மற்றிருகோவில்கள் அர்ச். பத்தாமபத்திநாதருக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்டுள்ளன. சலேசியன்சபையாரது ரோக்கியோமாதாவின் கோவிலை ஜப்பானிடமாக இருந்துவருகின்றபாப்பரசரின் ஸ்தானீகரான தே பேர்ஸ்ரென்பேர்க் அதிமேற்றிராணியார் திறந்துவைத்தார். இது ஆயிரம்பேருக்குப்போதிய இடவசதியைக் கொணடது. அர்ச். பத்தாம்பத்திநாதர் அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்று 48 மணிநேரத்துள் அவர் பேரால் ஷிகாமாவிலும், நினேமியாவிலும் கட்டப்பெற்ற கோவில்கள் திறந்துவைக்கப்படலாயின. நாஹவோவில் திறக்கப்பெற்ற புதியகோவில் 1950-ம் ஆண்டு அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்ற அர்ச். மரியகொறெற்றிக்கு அர்ப்பணஞ்செய்யப்பட்ட ஜப்பானின் முதலாவதுகோவிலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி மாதம்

போதுக்கருத்து:— கிறீஸ்துவ விசுவாசிகள் ஆபாசமும், வேதவிரோதமுமான பிரசுரங்களை ஊக்கத்தோடு எதிர்த்துப் போராடும்படியாக வேண்டிக்கொள்வது.

மிஷன்கருத்து:— லத்தீன் அமெரிக்க மாணவரிடையே வேதபோதக மனப்பான்மை வளர்ந்து செழித்தோங்கும்படியாக மன்றாடிக்கொள்வது.

சத்தியவேத
# பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
ஆவணி மாதம் 19-ந் திகதி

## மரியாயின் மாசற்ற இருதயம்

மரியாயின் மாசற்றஇருதயப் பக்திக்கு நேரப்பெற்றுள்ள மாதம்எது? இந்தஆவணிமாதமே. அதனல் இந்தமாதத்திலே அததிருத்தாயாரின் மாசற்ற இருதயத்திருநாள் வருவது சாலவும்பொருத்தமானதே. விலை மதித்தற்கரிய தேவஉதிரத்தினலேயே நாம் மீட்டிரட்சிக்கப் படலானேம். இந்தத் திவ்விய உதிரத்தின் நிலைக்களமாகிய தேவஇருதயத்தை உருவாக்கியது தேவதாயாரின் மாசில்லாத இருதயமே. இந்தமாசில்லாத இருதயப்பக்தி உலகில்ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று தேவனே திருவுளமானர் என்பது பாத்திமாதிருப்பதிக் காட்சிகளின்போது தெளிவாயிற்று. இன்றையஉலகை நிலைகுலைத்துச் சீரழித்துவரும் நாஸ்திகம, லோகாயதம், குரோதவிரோதம, கம்யூனிஸம் ஆதியனவும், அதனைத் தொடர்ந்து வரும் அணுக்குண்டு யுத்தஅபாயமும், போர்முழக்கமும், ஆயுதசுவீகரணம்ஆதியனவும் அகன்றொழிய வேண்டுமா? நீதியும், பிறர்நேசமும், சமாதானமும நிலவவேண்டுமா? இவற்றிற்கெல்லாம் மாதாவின்ஒத்தாசையே ஆவசியகம் வேண்டும். இந்தஒத்தாசையைப்பெற அத்தாயாரின் மாசில்லாத இருதயப்பக்தியை அனுசரித்து இம்மாதம் 22-ந் திகதியாகிய அடுத்தஞாயிற்றுக்கிழமைவரும் அவரது இருதயத் திருநாளைப் பயபக்தியுடன் கொண்டாடுவோமாக!

இம்முறை மரியாயின் புனித வருடத்திலே மாதாவின் இருதயத்திருநாள் வருகின்றது. பாத்திமாநாயகி ஏவயபடியே நமது பரிசுத்தபிதா திருச்சபை முழுவதையும், மனுமக்கள்சகலரையும் மாசில்லாதமாதாவின் மகா பரிசுத்த இருதயத்துக்கு ஒப்புக்கொடுத்தவாறு, நாமும நம்மையும், நமது குடும்பங்களையும் அதற்குக் காணிக்கையாக ஒப்புக்கொடுப்போமாக! நாம் நல்வழிப்பட்டுப் பிள்ளைகளுக்குரிய நேசத்தை அதற்குக் காண்பித்துவந்தால், மாதாவின் மாசில்லாதஇருதயம்தாய்க்குரிய நேசத்தோடு நமக்குஅடைக்கலமும, நல்வாழ்வும் அளித்துவருமென்று ஐயமின்றியே நம்பியிருக்கலாம் அன்றோ!

மேலும், பாத்திமாபதியில் காட்சிபெற்றமூன்றுபிள்ளைகளிலும் தற்போது உயிர்வாழ்ந்து ஓர்கன்னியாஸ்திரியாய் இருந்துவருகின்ற லூஸியாவுக்குத் தேவதாயார் தெரிவித்ததுக கேட்டுக்கொண்டதை நாம என்றும் மறவாமல் அனுசரித்துவருவோமாக! அதாவது, "என்பிள்ளையே! மனிதரின் அவநன்றியாலும், தூஷிப்பினலும் சணத்துக்குச்சணம உள்ளிறங்கும்முட்களினலே முற்றும்ஊடுருவப்பட்டுள்ள எனது இருதயத்தைப் பார்! அதற்கு நீயாவது ஆறுதலவருவிக்கப் பிரயாசப்படுவாயாக! நான் இப்போதுஅருளும உறுதிவாக்கையும மனிதருக்குத் தெரிவிப்பாயாக! தொடர்பாக ஐந்துமாசங்களிலே முதற்சனிக்கிழமைதோறும் எனக்கு நிந்தைப்பரிகாரம செய்யும்நோக்கமாகப் பாவசங்கீர்த்தனத்தினலே தங்களைச்சுத்திகரித்துத் திவ்விய நன்மை உடகொள்ளுகிறவாகளும, காரணிக்கத் தேவஇரகசியத்தைத் தியானித்துச் செபமாலைஓதி ஒருகாலமணிநேரத்தை என்னேடு போக்குகிறவர்களுமாகிய சகலருக்கும அவர்களின் இரட்சணியத்துக்கு அவசியம்வேண்டிய வரப்பிரசாதங்களை அருளி அவர்களது அந்தியவேளையில் ஒத்தாசைசெய்தருளுவேனென வாக்குப்பண்ணுகிறேன்"என்பதே. மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு ஆறுதல் உண்டுபண்ணவும், நமது அந்தியவேளையிலே அவரது ஒத்தாசையைப் பெற்றுக கொள்ளவும் என்ன இலகுவான பக்திஅனுசாரம் இது!

## புத்தக மதிப்புரைகள்

### மாதா மலர்மாலை

ஆக்கியோன்: பண்டிதர் க. த. ஞானப்பிரகாசம், நெடுந்தீவு.
பதிப்பு: அர்ச். பிலோமினு அச்சகம்.
விலை: ரூபா 1.

அமலோற்பவ அன்னையின் நூற்றாண்டுவிழா ஞாபகார்த்தமாக இப்பாமலர்மாலை யாக்கப்பட்டுளது. மாதாவை வாழ்த்திப்போற்றி, வணங்கித்துதிப்பதற்கேற்ற அருமையான பாடல்களை அடக்கியுள்ளது. திருச்செபமாலையில் நூற்றைம்பத்துமூன்றுமணிகள் உள்ளன. அவ்வாறே இம்மலர்மாலையிலும் நூற்றைமபத்துமூன்றுபாக்கள் திகழ்கின்றன.

இதிற்காணப்படும் செய்யுட்களைப் படிக்குங்கால் உள்ளத்திலும் நாவிலுந் தேனூற்றுப்போல் பக்திச்சுவையே விஞ்சிநிற்கின்றது. தன்மை நவிற்சி, உவமை, உருவகம் முதலியஅணிகளைப் புதியமுறையிலே வியக்கத்தகுமாறு ஆசிரியர் இதிலேகையாண்டிருக்கிறார். பண்ணுக்குஇசைவாக விருத்தப்பாக்கள் அமைந்திருப்பதோடு, பலவேறு நல்லுணர்ச்சிகளைப் பிறப்பிப்பனவாயுமிருக்கின்றன. பொதுவாகக்கூறுமிடத்து, செய்யுட்கள் ஒவ்வொன்றும சொல்லழகாலும், பொருளழகாலும், இசையழகாலும் கண்ணையுங்கருத்தையும் ஒருங்கேசேர்ந்து புளகாங்கிதமடையச்செய்கின்றன கவிஞர்தரும் உவமைகள் இடப்பொருத்தமாகவும், நயப்பொருத்தமாகவும் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஒன்றுகாட்டுவம்.

"நீரினை நீக்கிய நெற்பயிர் அம்புயம்
நின்று நிமிர்ந்திடுமோ
நேர்வழி தப்பிய பார்வைபெ ருப்பிள்ளை
நீள்ஊழி வீழாதோ
பாரினில் ஓர்தரு பற்றிப்ப டர்ந்திடாப்
பைங்கொடி வாடாதோ [வர்
பார்த்திடத் தனிமர மேறிச்கை விட்ட
பாட்டினைக் கேளீரோ [வர்
சீரினிற் பெற்றெடு தாயைக்கை விட்ட
சென்மமும் அப்படியே [வள்
செப்புவ தென்பல முடபொழு திம்ம
சேவடி சென்னிவைத்தே [குழல்
நாரினை நன்மணம் ஊட்டுபொற் பூங்
நாயகி வாழ்த்திவமே
ஞான மனோகரி தீனத யாபரி
நற்றுள் வழுத்திவமே —(17.)

இன்னும், ஆசிரியர் தமிழ்நூற்பயிற்சியில் மாத்திரமல்ல, சமயநூற்பயிற்சியிலும் வல்லுநரென்பதை இம்மலர்மாலையே தெள்ளத்தெளிவாகக் காட்டுவதாகும். இந் நூற்றைம்பத்துமூன்று பாக்களையும் படித்தால் மாதாவின் திருச்சரித்திரத்தையே படித்ததற்குச் சமமாகும.

பாட்டு என்றதுமே இன்றுநம்மவரிற்பலர் 'இது நமக்கு விளங்காது' என்று அஞ்சக்கூடும். அந்த அச்சத்துக்குச் சற்றேனும் இடமில்லாதவகையில் சாதாரணமக்களும படித்துணருமாறு எளிமையான தமிழ்நடையில் ஆசிரியர் இந்நூலை யாத்துள்ளார்.

எனவே கத்தோலிக்கதமக்கள் இந்நூலைத் தமது கலைசசெல்வமாக, அமலோற்பவ அன்னையின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக உவந்தேற்றுப் படித்துச் சுவைத்துப் பயனடைவார்களென்பதே எமது பெருநம்பிக்கையாகும்.

— பண்டிதர் செ. செல்வரத்தினம்

## சுகாதார வாசகம்

### (4-ஆம் 5-ஆம் வகுப்புகளுக்குரியது)

ஆக்கியோன: டக்றர் எஸ். ஏ. தர்மலிங்கம்.
பிரசுரம்: வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்.
விலை: ரூ. 1-25

ஆரம்பபாடசாலைக் கல்வியின்நோக்கங்களுள் உடல்வளர்ச்சி முக்கியஇடத்தைப் பெறுவதாகும். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்." ஆதலால் ஆசிரியர் பாலர்களுக்குத் தக்கமுறையில் சுகாதாரக்கல்வியை ஊட்டக் கடமைப்பட்டவராவர். அதற்குத்தகுதியான பாடபுத்தகங்களும், உபகரணங்களுங் அத்தியாவசியமானவையாகும்.

சுயபாஷையில் கல்வியூட்டப் படுவதாயிருந்தும் மாணவாகளுக்கேற்ற சுகாதாரநூல்கள் தமிழ்மொழியில் இல்லாதிருப்பது பெருங்குறையாகும். இப்பெருங்குறையை இந்நூலாசிரியர் சுகாதாரவைத்தியராகக் கடமையாற்றியகாலத்தே கண்டறிந்ததுமன்றி, அக்குறையைத்தீர்ப்பது தம்போன்றுரின் கடமையேஎன்பதையும உணரலானுர். இந்தஉணர்ச்சி அவர்மனதை விட்டு என்றும்அகலவில்லை. அதனுல் அவகாசம்கிடைத்த இத்தருணத்தே பிரயோசனந்தரத்தக்க இப்பெரும் பணியில் ஈடுபடலானுர்.

இந்நூலிலே சுகவாழ்வுக்கு வேண்டிய சாதனங்கள், நாம உட்கொள்ள வேண்டிய உணவில் அடங்கவேணடிய பொருள்கள், கழிவுப் பொருள்களை அகற்றும்விதம், பாலர்களையும், மற்றையோரையும் பீடிக்கும் நோய்கள், தொற்றுநோய்கள், நமது சத்துராதி (நோய்) களை வெல்லும்விதம் என்பன போன்றவிஷயங்கள் கவர்ச்சியூட்டத் தக்கமுறையில் விளக்கப்பட்டுள்ளன. "படம்முக்கால் பாடம்கால்" என்ற விதியைஅனுசரித்துப் பொருத்தமான இடங்களில் அழகியவிளக்கப்படங்கள் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. அத்தோடு அட்டவணைகளும், அப்பியாசங்களும வேண்டிய அளவுக்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பதிப்பகத்தாரின் அழகியபெரிய எழுத்துகளும், ஆசிரியரின் இனிமையும், எளிமையும்பொருந்திய செந்தமிழ் நடையும் நூலுக்குப் புத்தழகையும், பொலிவையும் தந்துநிற்கின்றன.

அனுபவமிக்க வைத்தியர் ஒருவர் இவ்வரும்பணியில் ஈடுபட்டமை பெரிதும்வரவேற்கத்தக்கதாகும். கல்வி உலகம அவரின் பொதுநலப்பணியை உவந்தேற்குமென்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எமக்குஅனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றேம்.

## வல்வைநகரின் முதற்குரவர்

### வண. எஸ். ஈ. விஜயரத்தினம், O.M.I. சுவாமிஅவர்கட்கு மகத்தான வரவேற்பு

"சரீரவைத்தியஞ் செய்வதிலும் ஆன்மவைத்தியஞ் செய்வதேமேல" என்று உளத்திற்றேர்ந்து துறவுபூணட வண. எஸ். ஈ. விஜயரத்தினம் சுவாமியவர்கள் சென்ற6 8-54 வெள்ளியன்று கொழும்பில் குருத்துவாபிஷேகம் செய்யப்பட்டபின் 11-ந்திகதிபுதன்கிழமை தமது ஜனனபதியாகிய வல்வெட்டித்துறையிலே பலவிடங்களிலுமிருந்து வந்துகுழுமியிருந்த திரளான மக்களால் நன்குவரவேற்று உபசரிக்கப்பெற்றனர்.

சுவாமியவர்கள் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார்கல்லூரியில் "இன்ரர் சயன்ஸ்"வரை கல்விகற்று, இலங்கைச் சர்வகலாசாலையில் வைத்தியசாஸ்திரம் கற்பதற்கான தேர்வுப்பரீட்சையிலும் சித்தியடைந்தார். அங்ஙனமாக ஓர்நாள் அவர் "மனிதர்க்குச் சரீர வைத்தியஞ்செய்து பட்டம்பதவியாய் வாழ்வதிலும் மனிதர்க்கு ஆன்மவைத்தியஞ்செய்து துறவியாய்வாழ்தலே மேல்"எனும் ஞானசிந்தனையால் உந்தப்பட்டுப் பெற்றுரின்அனுமதியை வேண்டிநின்றுர். வண. வீ. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்களின் துணையைக் கொண்டு அவர் தமதுபெற்றுரின் மனதைமாற்றி, அவர்களின்விருப்போடு ரோமாபுரிசென்று சமய சாஸ்திரம் பயின்று, திரும்பிவந்து தற்போது குருவாக அபிஷேகம் செய்யப்பெறலாயினர்.

சுவாமியவர்களின் பேரனும், தந்தையாரும் சக்கிறிஸ்தாம் பதவிவகித்திருந்து கோயிலுக்குச்செய்துவந்த திருத்தொண்டுகளின்பயனும், அவர் தாயாரின் மதிக்கரியதேவஅன்புமே எதிர்பாராதவிதமாகச் சுவாமியவர்களை ஓர்குருவாக வல்வெட்டித்துறைப் பட்டினத்துக்கு அளித்தன வென்பது கருதத்தக்கது.

சுவாமியவர்கள் அன்றுமாலை வாத்தியவரிசைகளுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டபோது சைவப்பிரமுகாகள்உட்படப் பலராலும் பந்தர்களில் மாலைகள்சூட்டப்பெற்றுப் புதிதாகக்கட்டப்பட்ட முகப்புடன் அழகுற்றுவிளங்கிய அர்ச். செபஸ்தியார் ஆலயத்திற்பிரவேசித்துத் திவ்வியசற்பிரசாதஆசீர்வாதம் அருளினுர். பின்னர் அலங்காரமுற்றுவிளங்கிய வரவேற்புமண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு அதிவண. ஜே. நீக்கிலாஸ் சுவாமியவர்கள் தலைமைவகிக்க, மற்றும்குருப்பிரசாதிகளும், அவர் பெற்றோரும அருகிருக்க, மாலைகள் சூட்டபபடலாயினர். பாடசாலைப்பிள்ளைகளால் இனியவரவேற்புப்பாக்கள் படிக்கப்பட்டன. வல்வைக் கிறீஸ்தவர்களின் சார்பாகச் சக்கிறிஸ்தாம் திரு. இ. மரிசிலீன்பிள்ளை அவர்களால் ஓர்வாழ்த்துப்பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது. கோயில் கிறீஸ்தவர்கள்சார்பாகவும், இனசனர்பலராலும் பூசைக்குரிய அன்பளிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

பின்னர் சுவாமியவர்களின் அருங்குணங்களையும், குருத்துவத்தின் மகிமை பெருமைகளையும் பற்றிக் கொழும்புதுறை ஆசிரியகலாசாலை அதிபர் வண. எல். ஏ. சிங்கராயர், M.A.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுவாமியவர்களாலும், முகாந்திரம் அப்புக்குட்டியாபிள்ளை அவர்களாலும், போசிரியர் எஸ். ஜே. செல்வநாதர் அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

புதியகுரவர் எழுந்து சகலர்க்கும், சிறப்பாகத் தம்மில் போன்புகாட்டிய சைவப்பெரியார்க்கும் தமது மகிழ்வைத்தெரிவித்து, "என்பிதா என்னை அனுப்பியதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன்" என்ற கிறீஸ்துநாதரின்ஏவுதலைத் தாமும்ஏற்று இயன்ற ஆன்மபணிசெய்வதாக வாக்களித்துத் தமதுநிறக்கா ஆசியிந்தனர். அதன்மேல் வண. கட்டளைக்குரவர் அவர்கள் வரவேற்புவிழாவை முனைன்று நடத்தித் தமக்குப் பேருதவிபுரிந்த அனைவர்க்கும் நன்றிகூறினர்.

மறுநாட்காலை புதியகுரவர் இருபத்திரண்டு குருப்பிரசாதிகளும், திரளானகிறீஸ்தவாகளும் சமுகமளிக்கத் தமதுஊரில் முதற்திவ்விய பூசைப்பலி ஒப்புக்கொடுத்தார். அன்று புதியகுரவரின் தகப்பனும், முன்னைநாள் சக்கிறிஸ்தாமுமான திரு. எஸ். செபஸ்தியாம்பிள்ளை அவர்களால் குருப்பிரசாதிகள்சகலர்க்கும் மதியவிருந்தளிக்கப்பட்டு விழாமுடிவெய்தியது. புதியகுரவர் இனிதே திருத்தொண்டாற்றத் தேவன் திருவருள்பாலிப்பாராக!

—இ. ம.

## ஸ்ரீமதி அக்னேஸ் மீனும்பிகை அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணம்—ஊர்காவற்றுறை நீதிபதியாய் இருந்துவருகிறவரான ஸ்ரீ கபிரியேல் தோமஸ்அவர்களின் பிரியபாரியாரான ஸ்ரீமதிஅக்னேஸ் மீனும்பிகை அவர்கள் எதிர்பாராதவிதமாகச் சென்ற 16-ந் திகதி திங்களன்று மரணத்திரையுள் மறைந்தாரென்னும் அமங்கலசெய்தியானது எவர்க்குமே பெருங்கவலையைத் தருவதாயிற்று. மரிக்கும்போது இவருக்குவயது 38. இவர் மட்டக்களப்பிலே பலராலும் நன்கறியப்பெற்றவராயிருந்து காலஞ்சென்ற டக்றர் சுப்பிரமணியம் சிதம்பரப்பிள்ளை அவர்களின் புதல்வியாவர். தமதுசாந்தமானபோக்காலும், அமைதியான வாழ்க்கையாலும், விருந்தோம்பல், இன்சொல் ஆகியாம் குணசீலங்களாலும் பிறரின்நன்மதிப்பைப் பெற்றிருந்தார். மறுநாள்சாயந்தரம் மகாவந். ஜே. ஏ. கியோமார் ஆண்டவர் அவர்களும், இருபதின்மருக்கு மேற்பட்ட குருப்பிரசாதிகளும், நீதிபதிகள், நியாயவாதிகள், வழக்கறிஞர்கள், அரசாங்கஉத்தியோகஸ்தர்கள், இனசனர் முதலானோரும்பெருந்திரளாகச் சமுகமளித்திருக்க, அழகிய பேழையில் வைத்த இவரின்பிரேதமானது பெரிய ஊர்வலமாக ஆசனக்கோவில் சேமக்காலைகொண்டுசென்று அங்கே மேற்றிராசனபரிபாலனரான மகாவண. எச். லெக்குத்தூர் சுவாமியவர்கள் அந்திமதிருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசிஆசீர்வாதம் கூறிநிற்கப் பிலாபமத்தியிலே பூமிதானஞ்செய்யப்படலாயிற்று. இவரின் பிரிவாற்றாது கவலையில் ஆழ்ந்திருக்கும் நாயகரோடும், பிள்ளைகளோடும், மற்றுமுள்ள இனசனரோடும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

● 1,000 முதல் 2,000 மின்மினிப்பூச்சிகளின் ஒளியை ஒன்றுசேர்த்தால்தான் ஓர்மெழுகுவர்த்திப் பிரகாசமளவு அது பிரகாசிக்குமென்றும், 1,37,00 மின்மினிப்பூச்சிகளின் ஒளியை ஒன்றுசேர்த்தாலதான் 60வற் பல்பின் பிரகாசத்தை உண்டுபண்ண முடியுமென்றும் ஆராய்ச்சியிலே கண்டறியப்பட்டிருக்கிறது.

# தாயே! அருள்புரிவீரே!

### நிலைமண்டில ஆசிரியப்பா

வழிவழி வந்த பழியினை நீக்கி
அழிவுகள் செய்த அலகையை ஓட்டலே
வாசனை குன்று வசந்த மலர்போல்
மாசுக வின்றியே மண்ணி லுதித்தனை!
தாவிது வம்சத் தாரகை யாகிய
மாதர்க் கரசியாம் மாமரி தாயே!
ஏவாள் தன்னை ஏய்த்தபே ரரவின்
தீதுறு சிரத்தைச் சிதைத்தவள் நீயே!
தண்மதி தன்னைத் தாளால் மிதித்து
விண்மீன் மௌலி சென்னியிற் சூடினை!
ஆனுள் சுவக்கீன் அருந்தவப் பாவாய்!
பூவுல கெங்கணும் புண்ணியர் திகழு
மெசியா என்னும் உலக ரட்சகரை
மேன்மை யாயீன்ற தேவ அன்னாய்!
கன்னிமை மீறாக் கற்பின் தெய்வமே!
புண்ணியம் முற்றும் பொலிந்த நல்லுருவே!
புனித ஆண்டாகும் இத்திரு ஆண்டில்
போற்றி உன்பதம் வாழ்த்தி நின்றோமே!
பாவிக ளெமக்காய்ப் பரிந்து பேசித்
தேவ சுதனின் திருவருள் பெற்றுத்
தாயே அடியவர்க் கருள்புரி வீரே!

ஆசிரியர் எஸ். எஸ். பிள்ளை,
நாக்களி.

## மாரீசன்கூடல் தபால்

அர்ச். கயித்தார் முனீந்திரன் திருநாளைத்தொடர்ந்து தேவதாயாரின் மோட்சாரோபணத் திருநாளுக்கு ஆயத்தமாக இம்மாதம் 11-ந் திகதி கொடியேற்றப்பட்டு, நான்குவிழாக்கள் நடைபெற்றன. 15-ந் திகதிகாலை கட்டளைக்குரவர் வண. ஹென்றி ஜெஸ்லண்ட் சுவாமியவர்கள் திருநாள்பாடற்பூசை நிறைவேற்றி, ஆன்மவாழ்விற்கு அமிழ்தினைஊட்டும் அரியதோர்பிரசங்கமும் செய்தார். பூசைமுடிவிலே பாடகர்குழாம் இனியகீதங்கள் படிக்க, பக்தர்குழாம் புடைசூழத் தேவதாயாரின் திருச்சுரூபசுற்றுப்பிரகாரம்நடைபெற்றுச் சுரூபஆசீர்வாதமும் அருளப்பட்டது. பின்னர் 16-ந் திகதியன்று அர்ச். ரோக்முனீந்திரரின் திருநாட்பாடற்பூசைநிறைவேறித் திருநாட்கள் முடிவெய்தின.

எஸ். எஸ். எஸ்.

* * *

## சிறுவரின் கொண்டாட்டம்

மாரீசன்கூடல் அர்ச். கயித்தார் முனீந்திரன்கோவில் மைதானத்திலே 11-8-54 பிற்பகல் 3 மணியளவில் கட்டளைக்குரவர் அதி வண. ஹென்றி ஜெஸ்லண்ட் சுவாமியவர்கள் தலைமையில் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பிறிக்கார்—ஜெஸ்லண்ட்என இருகட்சிகளாக வகுக்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தினர். இவர்களில் 5 வயதுக்குட்பட்ட சிறுவரின் விளையாட்டு மிகநன்றாயிருந்தது. பிறிக்கார் கட்சி விளையாட்டில் முதன்மைஸ்தானம் பெற்றது. போட்டியிலே முதலிடம்பெற்றவர்களுக்குக் கட்டளைக்குரவர் வெள்ளிக்கிண்ணமும், அநேக பரிசில்களும் வழங்கினர். பின்னர் ஒற்றுமையைப்பற்றி அவர் ஓர்சொற்பொழிவாற்றினர். திரு. எஸ். எட்வேட் அவர்களின் நன்றியுரையுடனும், தேசியகீதத்துடனும் போட்டி முடிவெய்தியது.

S. N. S.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

என்மகளுக்கு வெகுநாட்களாக இருந்தகட்டி யாதொரு சிக்சைக்கும்குணப்படாமல் சதாசகாயமாதாவின் சலுகையால் குணப்பட்டது. நன்றியாக நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

S. C. V.

## நன்றிகூறல்

மனிதன் துன்பத்தைத் தந்தான்; மாதாவே! நீரோ இன்பத்தைத் தந்தீர்.

தாயே! கடந்த 20 வருடகாலமாக என்கணவர் ஓர் இடத்தில் வேலைசெய்துவந்தார். எவ்விதகுற்றமு மில்லாத எனதுகணவரைத் திடீரென்று ஓர் பொய்ச்சாட்சி வெளிகொண்டு குற்றப்படுத்தி, பலஇடங்களிலும் அவமானப்படுத்திவிடவே, வேலையிலிருந்தும் விலக்கப்பட்டார்.



அதற்குக்காரணம் நான்இருந்த நல்லநிலைமையே. அவனதுகாய்மகாரம் கொண்ட மனம்என்னையும், எனது மக்களையும அதேவறியநிலைமையில் பார்க்கவேண்டுமென்ற ஆசைகொண்டு எனதுகணவரை வெளியேற்றச் செய்தது. எனதுகணவர் குற்றமற்றவர் என்றநிலைமையை உலகம்அறியக்காட்டித்தாவேண்டுமென்று எனது சகாயத்தாயிடம் தினமும்மன்றாடிவந்தேன். அதன்பிரகாரம் கடந்த மூன்றுமாதங்களுக்கிடையில் நான்நினையாத காரியங்கள் சகலத்தையும் நிறைவேற்றி,எனது கணவருக்கு முன்னிருந்தவேலையிலும் பார்க்க மேலான ஓர்உத்தியோகத்தையும் கொடுத்து என்னையும், என்கண்மணிகளையும் அவன்கண்முன் நல்லநிலைமையில்வைத்து எவ்விததுன்பமும் இல்லாமல் காப்பாற்றி வருகிறதற்காக எனது குடும்பத்தின்பெயரால் சகாயத்தாய்க்கு நன்றிசெலுத்தி நிற்கின்றேன்.

மேலும் எனது நேசசகோதரிக்கு முகமாற்றமருந்தால் ஏற்பட்ட நோய் பணத்தாலும், எவ்விதசிகிச்சையாலும் குணப்படாமல் தாயினது நவநாளில் 9 புதன்கிழமை பங்குபெற்றதின் பயனாக அவள் குணமடைந்தாள். தாயே! தாயற்ற எங்கள் இருவரின் துன்பங்களையும் அதிவிரைவில் தீர்த்ததற்காக எங்கள் மரணபரியந்தம் மறக்காத நன்றியைக் கூறிநிற்கின்றோம்.

பதுளை Mrs. Leon.

● பிராஞ்சிய தரைப்படை, கடற்படையின் வருடாந்த லூர்துபதித்திருயாத்திரைசமீபத்தில்நடைபெற்றபோது அதிலே 25 000 யுத்த வீரர்களும், மாலுமிகளும கலந்துகொண்டார்கள். பிரான்சியபடைகளின் மேற்றிராணியாரான கருதிஞல் பெல்தின் ஆண்டவர் யாத்திரைக்குத் தலைமைவகித்துத் திருசேத்திரத்தில் பெரியபாடற்பூசை நிறைவேற்றினர்.

## அறிவுச் சுடர்

1. உலகின்முதலாவது புதினப்பத்திரிகையை அடியிட்டு நடத்தியவர் யார்?

ஜூலியஸ் சீசரே. இவர் "அக்ராபுபிளிக்கா" (Actor Publica) எனும் முதலாவது புதினப்பத்திரிகையை அடியிட்டு, அதன் ஆசிரியராயிருந்து நடத்திவந்தார். இந்தப்பத்திரிகை 600 வருடங்களாக றோமைச்சக்கிராதிபத்தியத்தில் பிரசுரமாகிப் பரந்திருந்தது.

2. பிரான்ஸ்தேசத்திலே ஆர்ஷாதெய் (The Church of Argentenil) நகர ஆலயமணிகள் தினமுந்தவறாது பகல் 1 மணிக்கு அடிக்கப்பட்டுவருகின்றன. காரணம்என்ன?

கி. பி 800 ஆண்டு அதேநேரத்தில்தானே சாளிமேன் சக்கிரவர்த்தியிடமிருந்து கிறீஸ்துநாதரின் திருமேலங்கியை இந்தஆலயம் பெற்றுக்கொண்டமைதான்.

3. முதலாவது அமெரிக்கலட்சாதிபதி யார்?

ஜோர்ஜ்வாஷிங்ரன் அவர்களே. ஆயினும்இவர் அமெரிக்கஜனாதிபதியாகத் தெரியப்பெற்று 1789-ம்ஆண்டு சித்திரைமாதம் தமதுபதவியைக் கையேற்பதற்காக நியூயோர்க்நகர் செல்லும்போது "புறொமிசறிநோட்" ஒன்று கொடுத்து 1,500 டலர் கடன்பட்டுக்கொண்டுதான் சென்றார்.

4. இந்தியாவிலே கடந்த 317 வருடங்களாக எந்தக்கத்தோலிக்க ஆலய பலிபீடத்தில் இருமெழுகுவர்த்திகள் தொடர்பாக எரிந்துகொண்டிருக்கின்றன?

போர்த்துக்கேய இந்தியாவிலுள்ள கோவாநகர் அர்ச். மொனிக்கம்மாள் ஆலய பலிபீடத்தில்தான். இந்தஆலயம் கடந்த ஓர்நூற்றாண்டளவாகக் கைவிடப்பட்டிருந்தபோதிலும் மெழுகுவர்த்திகள் தொடர்பாக எரிந்துகொண்டேயிருக்கின்றன.

5. தேங்காயைக்குறிக்கும் "கோக்கனட்"(Cocoanut) என்னும் சொல் எப்படிப்பிறந்தது?

கோகா(Coca)என்ற ஸ்பானிய சொல்லிலிருந்து பிறந்தது. இதன் அர்த்தம் 'கொபிளின்' (Gobelin)அதாவது பூதம், பிசாசுஎன்பது.

6. பிரான்சின் தேசியபாதுகாவலர்களான அர்ச்சியசிஷ்டர்கள் யார்?

(1) அர்ச். ஜெனெவியெவ், (2) அர்ச். லூயிஸ், (3) ஜோண் அவ் ஆர்க் என அறியப்படுகின்ற அர்ச். ஆர்க்கின் அருளம்மாள், (4) அதிதூதரான அர்ச். மிக்கேல், (5) குழந்தையேசுவின் அர்ச். தெரேசம்மாள்என்பவர்களே.

7. ஐந்துவருடகாலத்திலே தனது பிரசைகளில் நான்குகோடிமக்களைக் கொன்றுதொலைத்தசீனச்சக்கிரவர்த்தி யார்?

மேற்குச்சீனவை ஆட்சிசெய்த சாஞ்ஜ்—ஹிசியென்—சுங்எனும் சக்கிரவர்த்தியே. இவன் கொன்றொழித்த நான்குகோடி சீனமக்களில் அவனுடைய சொந்தமனைவியர்களான 280 பேரும் அடங்குவார்கள்.

8. இந்தியாவிலே மாயமாக மறைந்துபோகும் வாவிஎது?

அப்றூலோற்றிஎனும் வாவியே. இது பெய்றம்காத்தாடியி லுள்ளது. இரண்டு வருடங்களுக்குத் தண்ணீரால் தேங்கியிருக்கும். பிறகுசரியாய்இரண்டுவருடத்துக்கு முற்றாகவற்றி வரண்டுபோயிருக்கும். இப்படியே இந்தவாவிமாறிமாறித் தண்ணீரால் நிரம்புவதும் பிறகு வற்றுவதுமாய் இருந்துவருகிறது.

9. சோவியற்ருஷியாவின் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் உண்டா?

இல்லை. ஏனெனில், அவைகளை ஆதரித்தால் குடிகெட்டது. ஆகக் கம்யூனிஸ்தகட்சி ஒன்றுதான்உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது :

அருமைச் சகோதரங்களே!

ஆசுபத்திரி என்று சொல்லப்படுகிற வைத்திய சாலைகள் ஏற்படக் கிறீஸ்து வேதமே காரணம் என்று அறிவீர்களா? பண்டைக் காலத்தில் கல்வி அறிவும், நாகரீகமும் கிரேக்க, ரோம, எகிப்து இராச்சியங்களில் மேம்பட்டு விளங்கின. ஆயினும் அக்காலத்தவர்கள் மனித உயிரை ஒருபொருட்டாய் மதித்தார்கள் இல்லை. சுரங்கங்களில் மறைந்திருந்த திருச்சபை சுதந்திரம் பெற்று வெளிவந்ததும், கிறீஸ்துவ அன்பினால் ஏவப்பட்டு வைத்தியசாலைகள் உண்டாயின.

ரோமையில் பபியோலா என்ற ஒரு சீமாட்டி இருந்தாள். அவள் உலக சுகசெல்வங்களைத் துரும்பாய் மதித்தாள். வேதத்தில் பற்றுதல் கொண்டாள். ஆத்தும, சரீர நற்கிரிகைகளிற் தனது ஆயுளைச் செலவழிக்கத் தீர்மானித்தாள். ரோமையில் ஓர் வைத்தியசாலையை ஆரம்பித்தாள். நோயாளரைப் பராமரிக்க அமைக்கப்பட்ட சாலைகளில் இதுவே முதல். அர்ச். பபியோலா நான்காம் நூற்றாண்டில் சீவித்தாள்.

அதே காலத்தில் ரோமை ஆட்சிச் சபையிலே ஓர் பிரதிநிதியான பொம்மாக்கியுஸ் என்பவர் அப்பட்டணத்தில் இருந்த வறியவர்களைச் சம்பேதுரு மகாலயத்துக்குக் கிட்ட ஒன்று சேர்த்து அவர்களுக்கு உணவு பரிமாறித் தனது பொருள் பண்டங்களில் சிலவற்றை அவர்களுக்குக் கொடுத்தார். மிகுதியைக் கொண்டு பபியோலாவின் உதவியோடு திபேர்நதி முகத்தில் யாத்திரிகர்களுக்கு ஓர்மடங் கட்டினார். இப்படிப்பட்ட ஊழியத்தைத் திருச்சபை எப்போதும் செய்து வருகிறது.

இந்த ஊழியத்தைப் பற்றியும், இன்னும் வேதப் பரப்புதல் ஊழியத்தைப் பற்றியும் விளக்கும் ஒரு பொருட்காட்சி கொழும்பில் அடுத்தவாரம் நடக்கும். இது உங்களுக்குப் பாடசாலை விடுமுறை காலமான படியால் வசதியுள்ள நீங்கள் போய் அதைப் பார்க்க வேண்டும். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## எபேத்தா

தீர், சீதோன் பட்டணங்கள் உள்ள டெக்காப்பொலிஸ் பகுதிக்கு யேசு ஒருமுறை சென்றார். அப்போது சிலர் செவிடும், ஊமையுமான ஒரு மனிதனைக் கொண்டுவந்து, அவனைத் தொட்டுக் குணமாக்க வேணுமென்று யேசுவைக் கேட்டார்கள்.

யேசு சனக் கூட்டம் இல்லாத ஓர் இடத்திற்கு அம்மனிதனை அழைத்துக் கொண்டுபோய், அவனுடைய காதுகளில் தமதுவிரல்களைவிட்டார். எச்சில் எடுத்து அவனுடைய நாவைத் தொட்டார். "எபேத்தா" அதாவது திறக்கக்கடவாய் என்றார். அம்மனிதன் கேள்வி யடைந்து, செம்மையாய்ப் பேசினான்.

அதைக் கண்ட சனங்கள் ஆச்சரியப் பட்டார்கள். யேசுசெய்த புதுமைகளுக்காக அவரைப் புகழ்ந்தார்கள். "எல்லாம் நன்றாய்ச் செய்தார்; செவிடனைக் கேட்கவும், ஊமையைப் பேசவுஞ் செய்தார்."

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## நிரைப்படுத்துங்கள்

பின்வருவனவற்றில் மாறுபட்டுநிற்கும் சொற்களையும், எழுத்துகளையும் நிரைப்படுத்தி எழுதுங்கள், பார்க்கலாம்

1. வான் கெடு நிப்பான் கேடுனே.

   ஆ. நீக்கலஸ் டயஸ்,
   அர்ச். மார்த்தீனார் குருமடம்

2. வளைவு குளங் கடசத்தோடு ஒத்து வாழ்தேடு.

   த. அருள்நேசன் பாய்வா,
   பேசாலை

3. கத்தை குவி மல்லாற் பாலதி ஆவனேன் எவனே எண்டதேன்.
   யாவும் கனியில் நடக்யிருக்கை.

   வி. பீற்றர், வதிரி

4. குாவரே எது இனமான் ஏக முகடை நாயம் நயன்.

   பெ. சிறில்,
   அர்ச். மார்த்தீனார் குருமடம்

5. நாகத்தை விழிப்பது காக்கா வன்கணவிட்டால் அகர்த்தர் வியர்த்தைக் காக்கிறதம்
   வேதிய பாவலன் துத்தகாச.

எம். ரி. அருளானந்தம், குளமங்கால்.

## குழந்தை

'ஜெயம்'

(1) சின்னஞ்சிறு பூங்குழந்தை
    செவ்விதழ்கள் செய்யும்
புன்னகையோ என்னுளத்தில்
    பொன்மழைதான் பெய்யும்.

(2) மின்னும் ஒளிக் கண்களிலே
    மின்னல் இருந்சாடும்
என்னகத்தின் உள்ளிருளாம்
    இன்னல் பறந்தோடும்.

(3) செங்கனிவாய் சிந்திவிடும்
    சீர்குதலைத் தங்கம்
தங்குமனம் பொன்னிலவின்
    தண்மகிழ்ச்சி பொங்கும்.

(4) மென்தளிரின் பைங்கரங்கள்
    மேனிமலர் முட்டும்
என்னுடலம் புல்லரிக்கும்
    இன்பமது கொட்டும்.

(5) ஆடியசைந் தோடிவரும்
    அழகுநடை காட்டும்
வாடிவரும் என்னுளம்தேன்
    வார்த்து மகிழ்வூட்டும்.

## சுவாமி! பாவசங்கீர்த்தனம்...

கெலிஸ் சுவாமியார் ஒரு விசாரணைப் பங்குக்குக் கட்டளைக் குருவாய் இருந்தார். அவர் தமது செபத்தாலும், தபசீவியத்தாலும், பிரசங்கத்தாலும் மந்தையைவிட்டுச் சிதறிய ஆடுகளைத் திரும்பவும் அதில் கொண்டு வந்து சேர்த்து விடுவார். ஆனால், ஒரு இளம குடும்பம் மாத்திரம் அவரது பிடியிலே அகப்படாது சீவிப்பதைக்கண்டு அவர் மனம் வருந்தினார்.

ஒருமுறை தமது பங்குக் கோவிலில் சனங்களுக்கு ஒரு ஞான ஒடுக்கம் போதிக்க நினைத்து, மொறிஸ் சுவாமியாரை வரவழைத் திருந்தார். அவரிடம் அந்தக் குடும்பத்தின் நிலைபரத்தையும் எடுத்துச் சொல்லியிருந்தார்.

"சுவாமி! எனது விசாரணைப் பங்கில் பேக் என்னும் பெரிய தனவந்தன் ஒருவன் இருக்கிறான்; அவனும், மனைவியும் கோவிலில் எப்போதும முன் ஆசனத்தில் உட்கார்ந்திருப்பர்; நானை தொடக்கம் கவனித்து வாரும; முன்பு இவர்கள் இருவரும் கோவிலுக்குவருவதே கிடையாது; அவனை மனந்திருப்ப வேண்டி ஒருநாள் நான் வேலைத் தலத்துக்குப் போய் அவனுடன் சம்பாஷித்தேன். 'பேக்! வருகிற செவ்வாய்க் கிழமை அர்ச். பத்திரிசியாரின் திருநாள் என்பதைஉனக்கு ஞாபகப்படுத்துகிறேன்; உன் மனைவியும், நீயும் அன்று தினமாவது கோவிலுக்கு வரமாட்டீர்களா?' என்று கேட்டேன். அவன் மறுமொழியாக: "நல்லது சுவாமி, நான் மனைவியுடன் இதைப்பற்றி யோசிக்கிறேன" என்றான்.

"தான் சொன்னதை அவன் மறுக்கவில்லை. அர்ச். பத்திரிசியாரின் திருநாளன்று தொடக்கம் கடந்த இரண்டு வருடமாய் இருவரும ஒழுங்காக ஞாயிற்றுக்கிழமைப் பூசைக்கு வருகிறார்கள். அர்ச். பத்திரிசியார் அவர்களை மனந்திருப்பி விட்டார். ஆயினும், இன்னும் ஒருபங்குவேலை முடியவில்லை. பூசைக்கு மாத்திரம் வருகிறார்கள். ஆனால், பாவசங்கீர்த்தனம் செய்யவும், தேவநற்கருணை பெறவும் இன்னும் அவர்கள் தொடங்கவில்லை. இந்தவேலையை உமது கையில் விட்டுவிடுகிறேன்."

ஞானஒடுக்கம் தொடங்கியது, காலை மாலை பிரசங்கங்கள் ஒழுங்காக நடைபெற்றன. பிரசங்க நேரத்திலும் இருவரும சமுகமாய் இருந்தனர். ஒருவாரமாகப் பிரசங்கங்கள் தொடர்பாக நடந்தன. அவர்களின் சீவியத்தையும் கெலிஸ் சுவாமியார் கவனித்து வந்தார். ஒடுக்கம் முடியும் நாளும் அண்மியது. கடைசிநாள் பாடற்பூசை. கோவில்முழுவதும் சனங்களால் நிறைந்திருந்தது. எல்லாரும் பாவசங்கீர்த்தனம் செய்து நற்கருணை பெற்றுத் தேவ நேசத்துடனும், மனச் சந்தோஷத்துடனும் செபஞ்செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த இளங் குடும்பம் மாத்திரம் தேவநற்கருணை பெறவில்லை. இதை அவதானித்த குருமார் இருவரும் கவலையுடனே தேவனைப் பார்த்து மன்றாடிக் கொண்டனர். மொறிஸ் சுவாமியார் பூசைப்பலி வேளையில் அவர்களுக்காக விசேஷவிதமாய்ச் செபஞ்செய்து வந்தார். தமது மன்றாட்டு அனுகூலமாக வில்லை என்று அவர் மனஞ் சோராது தொடர்ந்துசெபித்துவந்தார்.

திவ்வியபூசை முடிந்ததும் எல்லாரும் தங்கள் காங்களில் எரிகிற மெழுகுவர்த்திகளை ஏந்திக் கொண்டு ஞானஸ்நான வாக்குத் தத்தத்தைப் புதுப்பித்தனர். கோவிற் சடங்குகள் எல்லாம் முடிந்தபின் எல்லோரும் குதூகலத்துடன் வீடுசென்றார்கள். மொறிஸ் சுவாமியாரும் தமது பங்குக்குப் போக வேண்டிய தாயிற்று.

"சுவாமி! நான் முதல் புகைவண்டியில் போகவேண்டியிருப்பதால் நாளைக்கு ஐந்துமணிக்கு எனது பூசையைத் தொடங்குவேன; நீர் ஆறுதலாக உம்முடைய சனங்களுக்கு இரண்டாவது பூசையை நிறைவேற்றலாம்" என்றார் மொறிஸ் சுவாமியார். அப்படியே அடுத்தநாள் காலை ஐந்துமணிக்குச் சக்கிறிஸ்தை அறையில் மொறிஸ் சுவாமியார் பூசை உடுப்புகளை அணிந்து கொண்டு நின்றார். அப்போது அவருக்குப் பின்னால் "சுவாமி!..." என்று கூப்பிட்ட ஒருவரின் குரலைக் கேட்டுத் திரும்பிப்பார்த்து:

"உனக்கு என்னவேணும்?" என்றார்.

சுவாமி! "என்னிடமும், என்மனைவியிடமும் பாவசங்கீர்த்தனம கேளுங்கள்" என்றான் பேக். அவனைக் கண்டதும் சுவாமியாருக்கு உண்டான ஆனந்தத்தைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? "நல்லது, ஆயத்தஞ் செய்யுங்கள்" என்று சொல்லி அவனை அனுப்பினார். பாவசங்கீர்த்தனம் கேட்டு முடிந்து இருவரும் மொறிஸ் சுவாமியாரின் பூசையிலே அவர் கையால் நற்கருணை பெற்றனர்.

தாம் அப்பங்கை விட்டுப் போகுமுன் இந்த நல்ல முடிவைக்காண உதவிசெய்த தேவனுக்கு நன்றியறிதலாகவே அப்பூசையைத் தொடர்ந்து ஒப்புக் கொடுத்தார். திவ்விய பூசைப் பலி வேளையில் சுவாமியார் இவர்களுக்காகச்செய்த விசேஷ செபத்தால் இவர்கள் மனம்மாறித் தேவனுடன் உறவாடி மனச் சந்தோஷமும், அழியாத மனச் சமாதானமும் அடைந்தார்கள். — எம். ஜெயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூதன நான்குகள்

(1)

$1 \times 8 \div 2 = 4$

$11 \times 8 \div 2 = 44$

$111 \times 8 \div 2 = 444$

$1111 \times 8 \div 2 = 4444$

$11111 \times 8 \div 2 = 44444$

(2)

$87 + 1 \div 2 = 44$

$876 + 12 \div 2 = 444$

$8765 + 123 \div 2 = 4444$

$87654 + 1234 \div 2 = 44444$

$876543 + 12345 \div 1 = 444444$

$8765432 + 123456 \div 2 = 4444444$

வ. மரியதாஸ்,
நவாலிவடக்கு.

---

கடலிலே எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் அது கப்பலைத் தாழச் செய்யாது. தண்ணீர் கப்பலுக்குள் புகுந்தால்தான் அது தாழும். அதுபோல, உலகத்தில் எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அது ஒருமனிதனைத் தாழச் செய்யாது. அது மனிதனுடைய ஆகச் சீவியத்தில் புகுந்தால்தான் அவனை அமிழ்த்தும்.

---

## கண்டுபிடியுங்கள்

1. தாய் உதரத்திலிருந்து பிறக்காமல் இறந்தவர்கள் யார்?
2. தாய் உதரத்திலிருந்து பிறந்து இறக்காதவர் யார்?
3. தாய் உதரத்திலிருந்து பிறந்தும் இன்னுமே இறக்காத தீர்க்கதரிசி யார்?

டபிள்யு. யேசெவ் ததேயுஸ்
பெர்ணண்டோ

1. நீ தற்செயலாக ஓர் கிணற்றுள் விழுகிறுய். விழுந்ததும் நீ முதன் முதலாக என்ன செய்கிறுய்?
2. யாழ்ப்பாணத்திலிருந்து ஆடாமல் அசையாமல் கொழும்புக்குச் செல்வன எவை?

எம். மரியநாயகம்,
யாழ்ப்பாணம்

---

## காலஞ்சென்ற வணா. என். சந்தியாகுச் சுவாமியார்

இரணதண்டிகைக் கனகாரயமுதலியார் வழித்தோன்றலாகிய காலஞ்சென்ற வண. என். சந்தியாகுச்சுவாமியவர்கள் காவெட்டியைத் தமதுபிறப்பிடமாகக் கொண்டவர். இவரது உடன்பிறந்தோரான இரசகோதரர், இருசகோதரிகளுள் ஒருசகோதரியும், ஒருசகோதரரும் தொண்ணூறு, எண்பது வயதுடையவர்களாய் இன்னமும் சீவந்தராய் இருந்து வருகின்றனர். இக்குருப்பிரசாதி நாஞட்டான் விசாரணைப்பங்கில் இருபத்தைந்துஆண்டுகளாய்க் குருத்துவதொண்டு புரிந்த காலம் அதிசயத்திற்குரியது. அப்பகுதியில் முப்பத்திரண்டு கோவில்கள் உண்டு. இவைகளில் பிரசித்திபெற்ற கோவில்கள் பறப்பாங்கண்டல், உயிலங்குளம், நாஞட்டான், துவாங்கேணி என்னுமிடங்களிலுள்ளவைகளாகும். அக்காலத்தில் பிரயாணவசதிபற்ற பகுதியாய்இருந்தமையால் சவாரிவண்டில்தான் சுவாமியாரின் பிரயாணஇரதமாயிருந்தது. இவர் வைத்தியத்திலும் கைதேர்ந்தவராய் இருந்தமையாலும், சகிப்புத்தன்மை, ஒறுத்தல்முதலியன அமைந்தவராய் இருந்ததினுலும் பிரிவினையிலிருந்த மூவாயிரவருக்கு மேற்பட்டவர்களை எங்கள் மதஅனுசரணையிற் சேர்த்தார். தமது ஞானமக்களின் வசதிக்காகப் பலவருடங்களாய்ப் பகல்பதிஞெருமணிவரை உபவாசமாயிருந்து திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுத்துவந்தார். பாவசங்கீர்த்தனங் கேட்பதே இவரின் மகிழ்ச்சிக்குரிய தொண்டாகும். இவர் தமது எண்பத்தைந்தாம்வயதில் 9-8-54 பிற்பகல் ஒருமணியளவில் இனசனர், குருப்பிரசாதிகள்மத்தியில் பாடுபட்ட திருச்சிலுவையை முத்திசெய்தபடி பாக்கியமான மரணமடைந்தார். இவரை இழந்து துன்புறும் மருமக்கள், வண. எஸ். நீக்கலஸ்சுவாமியார், திரு ஐ. பற்றிக் ஆசிரியர், இசபெல்லா ஆசிரியைகளோடும், மற்றும்இனசனரோடும் நாமும் அனுதாபப்படுகிறோம்.

R. I. P.

— நிருபர்

---

## வண. எஸ். லாசறஸ் சுவாமியவர்களின் தேகவியோகம்

மட்டக்களப்பு, புளியந்தீவுப்பங்கை ஜனனபதியாகக் கொண்டவரும், தனக்கெனவாழாப் பிறர்க்குரியாளரும், முதுமையில் இளமைபெற்றவரும், துறவற சீவியத்திற்கோர் ஞானக் கண்ணுடியுமாய்விளங்கி,கடந்த 48வருடங்களாகப் புளியந்தீவு, வீச்சுக்கல்முனை, தன்ஞமுனை, மூதூர், திரிகோணமலை, கல்முனை, புளியடிக்குடா, தாண்டவன்வெளிமுதலாமிடங்களில் தேவதொண்டாற்றி ஆலயங்கள், பாடசாலைகளை நிருமாணிப்பதில் அயராதூக்கம் கொண்டிருந்தவருமான வண. செபஸ்ரியன் லாசறஸ் சுவாமியவர்கள் நெடுநாள்நோய்கண்டு கடந்த 5-8-54 வியாழக்கிழமை மாலை 9-15மணிக்கு வண. லீயோ அல்பசொக் சுவாமியார், உதவிக்கட்டளைக்குரவர் வண. அன்ரனி நோபட் சுவாமியார் ஆகியோர் செபவேண்டுதல் செய்துநிற்க, பங்குக் கிறீஸ்தவர்கள் புடைசூழ்ந்து நிற்கத் தமதுஆத்துமத்தைப் பரமன்பதம்அர்ப்பணித்துப் பரலோக பிராப்தியாகினர். மரிக்கும்போது இவருக்குவயது 78. மறுநாட்காலை இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காகத் திரிகோணமலை மேற்றிராணியாராகிய மகாவந். இக்னேஷியஸ் கிளென்னி ஆண்டவரவர்களால் துக்கப்பாடற்பூசை நிறைவேறியது. பிற்பகல் 4-30மணிக்குப் பலகுருப்பிரசாதிகள் சமேதராய் ஆண்டவரவர்களால் அந்திமதிருச்சடங்குகள் நிறைவேறியதும் சுவாமிகளின் திருமேனி ஊர்வலம் ஆரம்பமாயிற்று. வண. ஜோண் ரி. லினிஹேன் சுவாமியார், வண. ஜோர்ஜ் வம்பெக் சுவாமியார், வண. லீயோ அல்பகொக் சுவாமியார் ஆகியோர் துக்கசங்கீதம்பாடிச்செல்ல, தந்தையின் அன்பைக் காட்டுவதற்காகப் பின்சென்ற சனத்திரளின்காட்சி கண்கொள்ளாத் துயரகாட்சியாக இருந்தது. சேமக்காலை சென்றதும் ஆண்டவரவர்களால் செபவேண்டுதல்கள் செய்து, இறுதிஆசீர்வாதம் அளிக்கப்பட்டதும் பூமதானம் நிறைவேறியது. கீழ்இலங்கைப்பஸ்கம்பெனியார் சேமக்காலையிலிருந்து வீடுசேர்வதற்கான பிரயாணவசதிகளைச் சமுகமளித்தோர்க்கு அளித்தனர்என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. R. I. P

—எஸ். யோசேவ்

---

## ஸ்ரீ விக்றர் தம்பிநாயகம் அவர்களின் தேகவியோகம்

யாழ்ப்பாணநகரைத் தமது ஜனனபதியாகக் கொண்டவரும், நுவரெலியிலே பிரக்கிராசியாராகப் பிரபலம் பெற்றிருந்தவருமான ஸ்ரீ விக்றர் தம்பிநாயகம், ஜே. பி., யு எம். அவர்கள் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து இம்மாதம் 6-ந் திகதி முதல்வெள்ளிக்கிழமை கொழும்பிலே காலஞ்செல்லலாயினுரெனும் துயரசெய்தியறிந்து பெரிதும் மனவருத்தமுற்றோம். மரிக்கும்போது இவருக்குவயது 63.

ஓர் உத்தம கத்தோலிக்கரான இவர் திவ்வியபூசைப்பலியும், தேவநற்கருணையிலும் மிக்கானபக்தியுடையவர். அதனுல் தினமும் பயபக்தியுடன் திவ்விய பூசைகண்டு, தேவநற்கருணைபெற்றும், தினமும் எத்தனைபூசைகளில் உதவிசெய்யக் கூடியதாயிருக்குமோ அத்தனைபூசைகளிலும் பரிசாரகராகநின்று உதவிசெய்தும் வந்தார்.

தருணங்கிடைக்கும் போமெல்லாம் இவர் மலைநாட்டின்பிறபகுதிகளுக்கும், தென்னிந்தியாவிற்குஞ்சென்று பூசைப்பலியைப்பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்திவந்ததுடன், அதுபற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் புத்தகங்களும், துண்டுப்பிரசுரங்களும் எழுதிப் பிரசுரஞ்செய்திருக்கின்றூர்.

இவர் தமதுபாரியார், புதல்வர்சமேதராய் இருமுறை பரிசுத்தநாட்டுக்கும், ரோமாபுரிக்கும் யாத்திரைசெய்திருக்கின்றூர். நல்வாசினை இயக்கத்திலும் சிறப்பாகஈடுபட்டுப் பெரும்பணச்செலவிலே கத்தோலிக்கபுத்தகங்களைப் பெருந்தொகையாகவாங்கித் தமதுஇல்லத்தில் ஓர்நூல்நிலையத்தை அமைத்து, அதிலிருந்து பலரும், பலவிடங்களிலும் கத்தோலிக்கபிரசுரங்களை இரவலாகப்பெற்று வாசிக்கக்கூடியவசதிகளைச்செய்துவந்தார். உத்தரிக்கிறஸ்தல ஆத்துமாக்களிலும் மிகுந்தபற்றுடையவராய் மாதந்தோறும் அவர்களுக்காகத் திவ்வியபூசைகள் செய்விக்கவென்று ஒருதொகைப்பணம் ஒதுக்கிவந்தார். ஆனையிறவிலே தற்போது இருந்துவரும் சந்தாஞள் கோவிலானது இவர்இனுமாக உபகரித்த காணியிலேயே கட்டப்பட்டுள்ளது.

இவரின் பிரேதசேமம் மறுநாள் கொழும்பிலே சிறப்பாகநடந்தேறியது. கொழும்பு அதிமேற்றிராணியாரின் பிரதிநிதியாக வண. டி. ஆனந்தப்பா சுவாமியவர்கள் சமுகமளித்திருந்தார். ஆசனக்கோவில் உதவிக்கட்டளைக்குரவரான வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்களும், பங்களூரிலே திருத்தொண்டாற்றி வருகின்ற வண. யோசெவ் இராசகாரியர் சுவாமியவர்களும் இவரின் மருகர்களாவர். இவர்கள் இருவரும் குருத்துவ பதவியைத் தெரிந்துகொள்வதற்கு உற்சாகமும், ஊக்கமும்அளித்தவர் இவரேயெனில் மிகையாகாது. இவரை இழந்துதுன்புறும் ஏகபுதல்வரோடும், சகோதரர், சகோதரியோடும், மற்றுமுள்ளஇனசனரோடும் நாமும் அனுதாபப்படுகின்றோம்.

R. I. P.

---

## மிஷனரிமாருக்குப் பாராட்டுரை

தென்னிந்தியாவிலே நுங்கம்பாக்கத்திலுள்ள பெண்கள் கிறீஸ்துவகல்லூரியில (Women's Christan College) குடித்தனப்பயிற்சி அளிப்பதற்கென்று நவமாகக் கட்டியெழுப்பப்பெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவின்போது அதற்குத் தலைமைவகித்த இந்தியஅரசாங்க சுகாதாரமந்திரி இராஜகுமாரி அமிர்தகௌரிஅவர்களும், சென்னைச் சர்வகலாசாலை உபவேந்தர் டக்ரர் லட்சுமணசுவாமி முதலியார்அவர்களும், இந்தியாவில் பிரதேச மிஷனரிமார்கள் ஆற்றியுள்ள சேவைகளைப் பெரிதும்பாராட்டினின்றூர்கள்.

டக்ரர் லட்சுமணசுவாமி முதலியார் கூறியதாவது: "தென்னிந்தியாவில் கல்வித்துறையிலும், சுகாதாரத்துறையிலும கிறீஸ்தவ மிஷனரிமார்கள் ஆற்றிவந்துள்ள சேவையை நான் இருதயபூர்வமாகப் பாராட்டுகிறேன். சென்னைச்சர்வகலாசாலை உறுப்புக்களாயிருக்கும் 63 கல்லூரிகளில் 10மட்டுமே அரசினால் நடத்தப்பட்டு வருகின்றன. 26 கல்லூரிகள் மிஷனரியஸ்தாபனங்களாலும், 27 கல்லூரிகள் வேறு தனிப்பட்ட ஸ்தாபனங்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன. தென்னிந்தியாவில் மிஷனரிய ஸ்தாபனங்களையிட்டு ஒருமுறைப்பாடும் கிளம்பாததைப்பற்றி நான் மகிழ்ச்சிஅடைகிறேன். பெண்கள்கல்வியில் மிஷனரிமார்கள் இன்னும் அதிகமானசேவை புரிந்துவந்துள்ளார்கள். நமது சர்வகலாசாலையில் உறுப்புகளாயிருக்கும் 18 பெண்கள் கல்லூரிகளில் ஒரேயொருகல்லூரிமட்டுமே அரசினால் நடத்தப்பட்டுவருகிறது. 4 தனிப்பட்ட ஸ்தாபனங்களாலும், 13 மிஷனரிய ஸ்தாபனங்களாலும் நடத்தப்பட்டுவருகின்றன. இந்தியாவின் வேறெந்தப்பகுதியையும்விடத் தென்ஞட்டில் பெண்கள்கல்வி அதிகமாகப் பரவியிருப்பதற்குக் காரணம் மிஷனரிய ஸ்தாபனங்களின் உழைப்பேயாகும்."

இராஜகுமாரி அமிர்தகௌரி அவர்கள் கூறியதாவது: "சென்னைச்சர்வகலாசாலையின் உபவேந்தர் இந்தியாவிலுள்ள நமது மிஷனரியநண்பர்களின் அரியதொண்டைப் பாராட்டியதைப் பற்றியும், தென்னிந்தியாவில் மிஷனரிமார்கள்பால் துவேஷம்இல்லை என்பது பற்றியும் நான்மகிழ்ச்சி யடைகிறேன். சிலதினங்களுக்குமுன் நான் மத்திய பிரதேசத்திற்குச் சென்றிருந்தபோது குஷ்டரோகிகளின் விடுதியொன்றைப் பார்வையிட்டேன். அங்கு ஒருஅமெரிக்க கன்னியாஸ்திரி கடந்தஎட்டுவருடங்களாகத் தன்னந் தனிமையாய் அந்தவிடுதியை நடத்திவருவதாக அறிந்தேன். அந்தப்பயங்கர வியாதியிலிருந்து குணமடைந்தவர்கள் சிலரும், வியாதி முற்றுமல் தடுக்கப்பட்டநிலைமையில் இருந்தசிலரும் அவருக்கு ஓரளவிற்கு உதவிசெய்துவந்தார்கள். சுற்றுப்புறங்களிலிருக்கும் டக்ரர்மாரிற்சிலர் மருத்துவத்துறையில் அவருக்கு உதவி புரிந்துவந்தனர். அந்த 200 குஷ்டரோகிகளையும் பராமரிக்கும்வேலையில் பெரும்பகுதியை அந்தக்கன்னியாஸ்திரி நடத்திவந்தார். அவருக்கு உதவியாளர் தேவையென்பது சொல்லாமலேவிளங்கும்.

"இவர் ஆற்றிவந்த அபாரவேலைகளைக் கண்டு நான்பிரமிப்படைந்தேன். அவர்மிகுந்தகவனத்துடன்செய்துவந்த அந்தஅருவருப்பான வேலையை என்னுல் செய்யமுடியாது. இங்கேயிருக்கும் உங்களிலும் எவராவது செய்ய முடியாது. அப்படியிருந்தும் மிஷனரிமார்கள் இந்தியாவைவிட்டுப் போய்விடவேண்டும் என்றுசிலர் கூக்குரலிடுகின்றனர். ஆயினும் இந்தத்துவேஷக் கூச்சல்கள் ஒருசிலபேர்களிடமிருந்து மட்டுமே கிளம்புகின்றன. பொதுவிலே நமதுநாட்டின் இருதயம் அப்படிக் கெட்டுப்போகவில்லை. நல்லநிலைமையில்தான் இருக்கிறதுஎன்று நான் நம்பியிருக்கிறேன். நாட்டுப் புறங்களில் மிஷனரிமார்கள்சுகாதாரத்துறையிலும், கல்வித்துறையிலும், மற்றும் பலதுறைகளிலும் செய்துவரும் வேலைகளை மக்கள்பெரிதும் வரவேற்கின்றூர்கள். அதனுல் அவர்களை மக்கள் நேசிக்கின்றனர்என்பது எனக்குத் தெரியும். பொதுமக்களின் கருத்துக்கு நாம் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். அன்றியும் கிறீஸ்துவம் வேறெந்தமதத்தையும்போலவே நமதுதேசியஇனத்தின் அமைப்பில் ஒருபகுதியாக இருக்கிறதுஎன்பதை மத்தியஅரசாங்கத்தினரும், நமதுபிரதமமந்திரியாரும் பலமுறைகளிலும் எடுத்துக்கூறியுள்ளனர். கிறீஸ்துவ மிஷனரிமார்கள் நமதுநாட்டின்பால் விசுவாசமுடையவர்களாய் இருத்தல்வேண்டும் என்பதையே நாம் கோருகிறோம். அவர்கள் பூரணவிசுவாசம் உடையவர்களே யென்பதை நாம்அறிவோம். நமதுபண்மையுயர்த்த உதவிபுரிவார்கள் என்பதையும் நாம் அறிவோம்."

---

### நன்றியறிந்த தோத்திரம்

யேசுவின் திருஇருதய இரக்கத்தாலும், சதாசகாயமாதாவின் சலுகையாலும் நான் பொல்லாப்பின்றி ஓர்மகனைப் பெற்றேன். இதைநான் நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன்.

I. V.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகமாலை
அர்ச்.
பிலோமினம்மாள்
# திருநாள்

**ஆவணிமாதம் 23-ந் திகதி**
மெழுகுவர்த்திச் சுற்றுப்பிரகாரம்.
**ஆவணிமாதம் 24-ந் திகதி**
காலை 7 மணிக்குத் திருநாட்பூசை. பின்னர் சுற்றுப்பிரகாரம்.
22-ம், 23-ம், 24-ம், 25-ம் திகதிகளில் றெயின்வண்டிகள் கோவிலுக்கு முன்பாகத் தரிக்கும்.

**Rev. Fr. J. A. Francis, O. M. I.,**
St. Francis Xavier's Church,
Nallur.

# இதோ! நீகேட்ட பரிசை அளித்தேன்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கிறாள் நடனமங்கை. மன்னன் என்னசொல்லப் போகிறானோ எனறு ஏனையோர் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றனர். மன்னன் எல்லோரையும் கூர்ந்துநோக்குகிறான். உடன்பட்டால் ஒரு புனிதனை நேர்மையற்ற முறையில் கொன்றபழி தன்னைச்சாருமேயென அஞ்சுகிறான். இல்லையென்றால், இவ்வளவு பெருமக்களும் தன்னை வாக்குறுதிமீறிய தப்பிலியென இகழ்வார்களேயென்று கலங்குகிறான். இருதலைக் கொள்ளிஎறும்புபோல் ஆகிவிட்டது மன்னனின் நிலை. தத்தளிக்கிறான். வருந்தி என்னபயன்? பதில்கூறித்தானே ஆகவேண்டும்.

"பெண்ணே!" மன்னன் பேசலுற்றான். "இதோ! நீ கேட்டபரிசை அளித்தேன்; மகிழ்வுடன் பெற்றுச் செல்."

ஆ, என்ன! அருளப்பரின் தலையைக் கொடுக்க மன்னன் இணங்கிவிட்டானா? ஆம்! மதுப்போதையினால் மதிஇழந்த நிலையில் இருந்தபோதுகூறிய வாக்குறுதியைக் காப்பாற்ற, தன்சுயகௌரவத்தை நிலைநாட்டிக்கொள்ள அருளப்பரின் தலையைப் பரிசாகக்கொடுக்கத் தீர்மானித்துவிட்டான் மன்னன். அவன் தீர்ப்பை எதிர்த்துவாதாட அங்கு ஒருவரும் முன்வரவில்லை.

அதோ! இரத்தம்தோய்ந்த அருளப்பரின் தலையை ஒருதட்டில் கொண்டுவந்து கொடுக்கிறான் சேவகன். அத்தட்டை நடனநங்கை தனதுஅன்னை ஏரோதியாளிடம்கொடுக்கிறாள். தாய், தன்மகளைக் கட்டிமுத்தமிட்டு ஆனந்தப்பள்ளுப் பாடுகிறாள்—வெற்றி! ஏரோதியாளுக்குவெற்றி!

கொண்டகணவன்— பிலிப்பு—உயிரோடுஇருக்க, கணவனின்சகோதரன் ஏரோதுமன்னனைத் தேடி அலைந்தாள் அந்தஆணவக்காரி ஏரோதியாள். மனுக்குலம் உய்ய மாதபம்இயற்றிவந்த மகான் அருளப்பர் அவளதுசெயலைக் கண்டித்தார். பாசாங்குக்காரி பதறினாள். பாவையின்சொற்கேட்டு அருளப்பரைச் சிறைப்படுத்தினான் மன்னனஏரோது. அம்மட்டோடு நின்றாளா? இல்லை. தனது இன்பவாழ்க்கையில் குறுக்கிட்டவனை நிர்மூலமாக்கிவிட எண்ணினாள்—பழிதீர்த்துக் கொண்டாள்! இச்சம்பவம் நிகழ்ந்து சுமார் ஈராயிரம் ஆண்டுகள் கழிந்துவிட்டன. சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் இம்மண்ணுலகிலே நிகழும் போராட்டத்திற்கு இச்சம்பவம் ஒருஎடுத்துக் காட்டு. இதனைஒத்தநிகழ்ச்சிகள் உலக அரங்கில் இன்னும் நடக்காமலில்லை.

## GOVT. TENDERS

### Jaffna Kachcheri

N2208—Tenders for the sale of Toll Rent, Kerativu-Sangupiddy Ferry Service 1954/55, close at 12 noon on 3-9-54.

N2209—Tenders for the sale of Toll Rent, Karaitivu-Kayts Ferry Service 1954/55, close at 12 noon on 10-9-54.

For particulars see Part 1-Section II, Govt. Gazette, 20-8 54, copies of which are available for perusal at all Post Offices.

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 27-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணியளவில் அர்ச். சூசையப்பர்சிற்றாலயத்தில் நடந்தேறும். கூட்டத்தின்போது ஆறுசகோதரர்கள் தமது நவாப்பியாச காலத்தைத் தொடக்குவார்கள். புரட்டாசிமாதம் பரிபூரண பலன்கள் அடையக்கூடிய நாட்கள்: 3, 4, 8, 11, 17, 18, 24, 27, 29. பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடிய நாட்கள்:— புரட்டாசி 8, 17.

A. S. FRANCIS OF MARY
for Director

# மோட்சஅலங்காரி திருநாள்

காவலூரில் கோவில்கொண்டிருக்கும் மோட்ச அலங்காரியான தேவ அன்னையின் திருநாள் இம்முறை மரியாயின்வருடத்தை முன்னிட்டுப் பெரிதும் பக்திச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நவதினவிழாக்கள் 6-8-54 வெள்ளியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. கோவில் மின்சாரதீபங்களாலும், மலர்மாலைகளாலும் அலங்காரஞ்செய்யப் பட்டிருந்தது. நவதினங்களிலும் கட்டளைக்குரவர் தேவமாதாவின் பிரார்த்தனையிலுள்ள வேண்டுதல்களை விளக்கி அரியபிரசங்கங்கள் செய்தனர். 14-ந் திகதிமாலை வண. எல். ஏ. சிங்காரயர், எவ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் எனும்குரவர்கள் உதவிபுரியக் கட்டளைக்குரவர் வண. வி. ஆர். தார்சீசியஸ் சுவாமியவர்களால் வேஸ்பர்பாடி நற்கருணைஆசீர்வாதம் அருளப்பட்டது. மறுநாட்காலை திருநாட்பாடற்பூசையோடும், பிற்பகல் தேவமாதாவின் திருச்சுரூபஊர்வலத்தோடும், திவ்விய நற்கருணை ஆசீர்வாதத்தோடும் திருநாள் இனிதே முடிவெய்தியது.

மாதாவின் தாசன்

## அரசாங்க விளம்பரம்

### கிருஷிகப் பகுதி

N. 2198 & 99-வவுனியாவிலும், கிளிநொச்சியிலுமுள்ளஆண்கள் கிருஷிகபாடசாலைகளில் கமக்காரப்பிள்ளைகளின் ஒருவருடப் பயிற்சி — பயிற்சிபெறவிரும்பும் வடமாகாண மாணவர்கள் விண்ணப்பங்களைப் 10-9-54-ற்கு முன் யாழ்ப்பாணம் கிருஷிக உத்தியோகத்தருக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரங்களை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். வயது: 1-10-54-ல் 17-ற்கு மேலும், 21-ற்கு உள்ளும். தராதரம்: 8-ம்வகுப்பு.

* * *

### வனபரிபாலனப் பகுதி

N. 2210—24092.3 கனஅடி அடங்கிய 2642 பாலை, முதிரை, காட்டாமணக்குமரங்கள் விற்பனைக்குப் பரந்தன் அரசினர் மரக்காலையில் இருக்கின்றன. விற்பனையின்விபரம்: பாலை ஒருகனஅடி: ரூபா 1-25; முதிரை, காட்டாமணக்கு ஒரு கனஅடி: ரூபா 2-50. முழுவிபரங்கட்கும் பரந்தன் டிப்போக் கீப்பருக்காவது, அல்லது வடபகுதி வனபரிபாலன அதிகாரிக்காவது மனுச்செய்க.

## முத்தித்திறவுகோல்

எம்மிடத்தில் தற்போது விற்பனைக்குத் தயாராகிவிட்டது. தேவையானோர் மேல்வரும் விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

| விலை பிரதி: | ரூ. ச. |
|---|---|
| தோற் கட்டு: | 3—50 |
| கலிக்கோக் கட்டு: | 2—50 |

**மனேஜர்**
அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம

சென் வின்சென்ற் டி போல்
தருமசபை
யாழ்ப்பாணம்



### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

இற்றாலை: மிசெஸ். பிரூங் அன்ரன் 11-00 —கல்இல்லா: ஏ. எல். சைமோன் 10-00, — எம். சிமோன் 5-00—கம்பளை: ஏ. டி. சேவியர் 6-00 — வண்டுறம்ப: ஜே. அந்தோனியம்மா 2-00,— பி. பிதிற்றோ 10-00 — கொற்றகல: எஸ். தோமாஸ் 2-00 — முள்ளிக்குளம்: ஏ. பீ. இஞ்ஞாசியா கூஞ்ஞ 1-00— இசமாலைத்தாழ்வு: எஸ். ஞானப்பிரகாசம் 3-00— பொன்னறகல: கே. எம். சந்தனம் 3-00 — நுவரேலியா: யோசேப் எம், டானியல் 2-00—மலாயா: ஏ. ஏ. சாமுவேல் 10-00—மலாயா: எஸ். யோசேப் 13-25—மலாயா: ஜே. சவிரிமுத்து 50-00— வட்டவளை: ரி. அன்ரனிக்குருஸ் 5-00 — சிங்கப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 20-00 - வேப்பங்குளம்: எம். பிலோமினம்மாள் 2-00, எஸ். ஏ. செபமாலை 1-00, கே. சின்னப்பு 3-00, ரி. கிளாறம்மா 2-00, எஸ்.ரி. அனத்தாஸியா 1-00, பி. பறுனாந்து 5-00 — வவுனியா: பி. ஜே. சிறில் 2-00—செட்டிகுளம்: ஜே. இராயப்பு 12-00 — கரவெட்டி: எஸ். பஸ்தியாம்பிள்ளை 1·00, பி. கபிரிகேற்பிள்ளை 1-00 — அப்புத்தளை: எஸ். எம். யோசேப்பு 10-00—டொண்கொற்றுவா: யேக்கப் மரியமதலேனா 2-00, வி. கபிரியேல் பறுனாந்து 5-00 — மாம்புரி: எஸ். அலக்சாந்திரியா 2-00 — கருக்குப்பனை: டபிள்யு. மேரி பெர்னாண்டோ 2-00 — புனைப்பிற்றியா: பி. பேதுரு பெர்னாண்டோ 2-00 — யாழ்ப்பாணம்: ஏ. பிரான்சீஸ்பிள்ளை 6-00, எம். வேதநாயகன் 1-00, எம். கிதபொன்கலன் 1-00 — பரந்தன்: ரி. மரியாம்பிள்ளை 2-00 — சூராவத்தை: எஸ். சின்னத்தங்கம் 3-00 — காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — கேகாலை: ஏ. யோசெவ் 10-00—சல்கமுவா: ஏ. மரியானாள் 2-00, பி. நீக்கிலாஸ் 2-00, ஏ. பாவிலுப்பிள்ளை 2-00, ஏ. சந்தியாப்பிள்ளை 3-00 — கொறுக்காவல்ல: ஏ. பிலிப்புப்பிள்ளை 6-00—தலைவில்லு: ஏ. இ. லீயோ 10-00 —பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 5-00, மிசெஸ் எஸ். வி. பீற்றர் 2-00, ஜே. எஸ். பீற்றர் 2-00—கொச்சிக்கடை: கே. எம். பிரான்சீஸ்கா 10-00, பி. எஸ். கயித்தான் 10-00 — காரைக்கால்: பெனடிற் 20-00 — பம்பலப்பிற்றியா: மிசெஸ் ஏ. பிரான்சீஸ்பிள்ளை 5-00—புளுகோட்டம்: எம். பி. போல் 3-00—புத்தளம்: பிரூங் எல். லீயோ 3-00 — தலவாக்கொலை: எஸ். ஏ மத்தேயுஸ் 91-00 — மன்னார்: எம். பிலோமினம்மா 2-00—கொழும்பு: மிஸ் ரி. சவிரிமுத்து 3-00, தே. அந்திரேயாஸ் 5-00, மிஸ் ஏ. அந்தோனிப்பிள்ளை 7-00.

| The Director, St. Joseph's Conference, Bishop's House, JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |
|---|---|

## நன்றியறிந்த தோத்திரம்

எனது மனைவி கர்ப்பவதியானதும் சதாசகாயமாதாவின் அடைக்கலத்தில் அவளை ஒப்படைத்தேன். பலதடவைகளில் அபாயத்துக்குரிய நோய்வாய்ப்பட்டும் சஞ்சலப்படுவோருக்குத் தப்பாத ஆறுதலும்,சதா அடைக்கலமுமாகிய அன்புள்ளஅன்னை—தமதுநேச திருக்குமாரனிடம் நமக்காகப்பரிந்துபேசி ஆதரித்துக்காப்பாற்றும் நல்லதாய் நமக்குஉண்டு என அநேகர்அறியும்படி பிரசவத்தின் முன்னும் பின்னும் ஏற்பட்டஆபத்துக்களையெல்லாம் நீக்கிக் குழந்தையும், தாயும் நல்லசுகத்துடன் இருக்கக் கிருபைசெய்த சதாசகாயமாதாவுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம்செய்து என்னையும், என் மனைவியக்களையும் அத்திருத்தாயின் பாத அடைக்கலத்தில் காணிக்கையாக வைக்கிறேன்.

ச. வெலிச்சோர் பீரிஸ்

பேசாலை

# நாளுசங்கதிகள்

● மத்தியதரைக்கடலிலே தேசிய பூமிசாஸ்திரசங்கமொன்று ஆராய்ச்சி நடத்தியதன்விளைவாக, உலகில் மகாப்பழைய சாமான்கப்பல் — அதாவது கி. மு. மூன்றாம்நூற்றாண்டில் ஆழ்த்தப்பட்ட கிரேக்க—றோமன் சப்பலொன்றைக் கண்டறிந்திருக்கின்றது.

—தாரமிழந்தவரான 70வயதுடைய வண. ஜெப்ஹாட் எயிஸ்நார் அவர்கள் குருப்பட்டம்பெற்றுச் சால்ஸ்போர்க்நகரிலுள்ள அர்ச். இராயப்பர் சந்நியாச ஆச்சிரமத்தில் சென்றஆடிமாதம் 12-ந் திகதி தமதுமுதற்பூசை நிறைவேற்றியபோது அவரின்பிள்ளைகள் ஐவரும், அநேகபேரப்பிள்ளைகளும சமுகமாயிருந்தார்கள். இவர்முன்னே ஓர்தபால் கந்தோர் அதிகாரியாக இருந்தவர்.

● இரண்டாவது உலகயுத்தம் முடிவடைந்ததுமுதல் ஐக்கியநாடுகளின் ஸ்தாபன பிள்ளைகளின்நிதிகொண்டு 57 நாடுகளைச்சேர்ந்த பிள்ளைகளுக்கும், தாய்மாருக்கும் இலவசமாக உதவப்பட்டிருக்கும்பாலைக் கோப்பைகளில் விட்டு வரிசையாக வைத்துக்கொண்டு போனால் அவைகள் சமரேகைநீளத்துக்கு நான்குமுறை உலகத்தைச் சுற்றிவருமாம்.

● ஜேர்மனியிலே வெஸ்றபாலியாவைச்சேர்ந்த மன்ஸ்றர்நகர் மேற்றிராசன கத்தோலிக்கர் இனிமேல் சிற்றாலயங்கள் அமைக்கப்பெற்ற றெயின் வண்டிகளிலே றோமாபுரிக்கும், லூர்துபதிக்கும் செல்லக்கூடியோராய் இருக்கின்றார்கள். இந்தச் சிற்றாலயம் ஓர் பலிபீடத்தையும், அறையுண்டதிருச்சிலுவையையும், ஆர்மோனியம் ஒன்றையும் கொண்டுள்ளதாகும்.

—பிரித்தானியஅரசின் பிரதமரான சேர் வின்ஸ்ரன் சேர்ச்சில்அவர்கள் தமது80-வதுவருட பிறந்ததினமாகிய வருகிறகார்த்திகைமாதம் 30-ந் திகதியன்று தம்முடையபிரதமர்பதவியிலிருந்து இளைப்பாறுவாரெனச் சிலர் முன்னதாகஉணர்ந்து கூறுகின்றார்கள். ஆனால், அவர் அடுத்தவசந்தகாலத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படும் பிரித்தானியபொதுத்தேர்தல் முடிகிறவரையில் தமதுபதவியைக் கைவிடமாட்டாரெனச்சொல்லப்படுகிறது.

—கிறீஸ்நாட்டிலே மறைமுகமாக ஒளித்துமறைந்து வேலைசெய்துவந்த கம்யூனிஸ்ததலைவனான நிக்கலஸ் பிறமபிடெஸ்எனபவன் இராசதுரோகத்துக்கும், வேவுபார்த்ததற்குமாகச் சென்றசனிக்கிழமை கழுவேற்றப்பட்டிருக்கின்றான். இவன் சென்றவருடம் ஆவணிமாதம் அதென்ஸ்நகரிலே இராணுவநீதிஸ்தலம் ஒன்றால் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்தான்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, August 19-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org